# தமிழ் சொல்
# TAMIL SOUL

Volume : 1 | Issue : 7 | October 2024 | Chennai | Pages : 8 | Price : 8.00 | (Tamil Monthly)

மலர் : 1 | இதழ் : 7 | அக்டோபர் 2024 | சென்னை | பக்கம் : 8 | விலை : ரூ.8.00 | (தமிழ் மாத இதழ்)





"சனாதனம் என்ற பெயர் சமஸ்கிருதத்தில் இருந்து வந்தது. சனாதனம், சமத்துவத்துக்கும் சமூக நீதிக்கும் எதிரானது. சனாதனம் என்றால் நிலையானது என அர்த்தம். அதாவது மாற்ற முடியாதது என்றும் சொல்லலாம். எல்லாவற்றையும் மாற்ற வேண்டும், எதையும் கேள்வி கேட்க வேண்டும் என உருவானதுதான் திராவிட இயக்கமும், கம்யூனிச இயக்கமும்."

சனாதனம் குறித்த உதயநிதி ஸ்டாலி னின் மேற்கண்ட கருத்துகளும், கூடுதலாக முன்வைத்த விமர்சனங்களும் தேசிய அளவில் எதிர்ப்புகளைச் சம்பாதித்துக் கொடுத்தாலும், அவர் கவனம் பெறவும் காரண மாக அமைந்தன.

உதயநிதி ஸ்டாலினை பொருத்தவரை, சினிமா, அரசியல் ஆகிய இரண்டிலுமே அடுத்தடுத்த கட்டங்களுக்கு விரைவாகவே நகர்ந்து வந்திருக்கிறார். குருவி திரைபடம் மூலம் திரைத்துறையில் தயாரிப்பாளராக நுழைந்த அவர், விரைவாகவே திரையில் நாயகனாகி மாநிலம் முழுவதும் அறியப்படும் முகமானார்.

அரசியலில் நுழைந்த ஐந்தே ஆண்டுகளில் இன்று துணை முதல்வராக வளர்ந்துள்ளார். மு.க.ஸ்டாலின், ஓ.பன்னீர்செல்வம் ஆகியோரைத் தொடர்ந்து தமிழ்நாட் டில் துணை முதலமைச்சரான மூன்றாவது நபர் உதயநிதி ஸ்டாலின். அந்த வகையில் 15 ஆண்டுகளில் தமிழ்நாடு மூன்றாவது துணை முதலமைச்சரைக் கண்டிருக்கிறது.

உதயநிதி ஸ்டாலின் அரசியலிலும், சினிமாவிலும் சாதித்தது என்ன? அவரைச் சுற்றியுள்ள விமர்சனங்கள், சர்ச்சைகள் என்ன?

தமிழ்நாட்டின் முக்கியமான அரசியல் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், 2008 ஆம் ஆண்டு வரையிலும் உதயநிதி ஸ்டாலின் பெரிதாக அறியப்படாத ஒருவ ராகவே இருந்து வந்தார்.

திமுகவின் அதிகாரப்பூர்வ நாளேடான முரசொலியின் நிர்வாக இயக்குநராக அவர் இருந்து வந்தார். 2008 ஆம் ஆண்டில், முன் னணி நடிகர் விஜயை நாயகனாக வைத்து குருவி என்ற திரைப்படத்தை தயாரித்ததன் மூலம் திரைத்துறைக்குள் உதயநிதி ஸ்டாலின் நுழைந்தார்.

மன்மதன் அம்பு, ஏழாம் அறிவு என அவரது ரெட் ஜெயண்ட் மூவிஸ் நிறுவனத்தின் தயாரிப்பில் அடுத்தடுத்து வெளியான படங்கள் யாவும் முன்னணி நட்சத்திரங்களைக் கொண்ட பெரிய படங்களாகவே அமைந்தன.

கடந்த 2012ஆம் ஆண்டு ஒரு கல் ஒரு கண்ணாடி என்ற படத்தின் மூலம் நாயக னாக உதயநிதி ஸ்டாலின் அறிமுகமானார். நகைச்சுவை, காதல் படமான அந்தப் படம் சிறப்பாக அமைய, ஒரே படத்தில் தமிழ் நாடு முழுவதுமே தெரிந்த முகமாக அவர் மாறினார்.

முன்பு நகைச்சுவை, காதல் படங்களில் தொடர்ந்து நடித்து வந்த உதயநிதி ஸ்டா லின் அடுத்து வந்த ஆண்டுகளில் நெஞ் சுக்கு நீதி, மாமன்னன் போன்ற சமூகப் பிரச்னைகளைப் பேசும் படங்களிலும் நடித் தார்.

அவரது ரெட் ஜெயண்ட் தயாரிப்பு நிறுவனம் திரைப்படங்களை விநியோகிக்க வும் செய்தது. பொன்னியின் செல்வன் உள் பட சமீப ஆண்டுகளில் வெளியான பல பெரிய படங்களை இந்நிறுவனம் விநியோகம் செய்துள்ளது.

சினிமாவில் நடிப்பதை நிறுத்திக் கொள்வதாக கடந்த ஆண்டு அவர் அறி வித்தார். மாரி செல்வராஜ் இயக்கத்தில் வெளியான மாமன்னன் படமே அவரது கடைசி திரைப்படமாக அமைந்தது.

கடந்த 2019ஆம் ஆண்டு நாடாளுமன் றத் தேர்தலில் திமுக கூட்டணிக்கு ஆதரவாக உதய நிதி ஸ்டாலின் தமிழகம் முழுவதும் பிரசாரம் செய்தார். அதே ஆண்டு ஜூலையில் திமுக இளைஞரணி செயலாளராக அவர் நியமிக் கப்பட்டார்.

கடந்த 2021ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலின்போது மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டப்படாததை முன்னி றுத்தி, ஒற்றை செங்கலைக் கையில் ஏந்தி தமிழ்நாடு முழுவதும் அவர் மேற்கொண்ட பிரசாரம் பெருமளவில் கவனம் ஈர்த்தது.

அந்தத் தேர்தலில், சென்னை சேப் பாக்கம் — திருவல்லிக்கேணி தொகுதியில் இருந்து சட்டப்பேரவைக்கும் அவர் தேர்வானார். அடுத்த ஆண்டு டிசம்பரில் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அமைச்சரவையிலும் அவருக்கு இடம் கிடைத்தது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சராக அவர் பொறுப்பேற்றார்.

உதயநிதி ஸ்டாலினை துணை முதலமைச்சராக்க வேண்டும் என்ற குரல்கள் திமுகவில் அண்மைக்காலமாக ஒலிக்கத் தொடங்கின. திமுக நிர்வாகிகள் மட்டுமின்றி, அமைச்சர்களும்



கூட அந்தக் கோரி க்கையை பகிரங்கமாக பொது வெளியில் முன்வைத்தனர். குறிப்பாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் அமெரிக்க சுற்றுப் பயணத்திற்கு முன்பாக இந்தக் குரல்கள் ஓங்கி ஒலித்த நிலையில், தற்போது அது நிஜமாகியுள்ளது.

உதயநிதி ஸ்டாலின் அரசியலில் நுழைந்த போதே, அவரது தந்தையும் தற்போதைய முதல்வருமான மு.க.ஸ்டாலினை போலவே வாரிசு அரசியல் என்ற விமர்சனத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதிமுக, பாஜக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் இந்த விமர்சனத்தைக் கடுமையாக முன் வைத்தன.

உதயநிதி ஸ்டாலின் கடந்த ஆண்டு தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலை ஞர்கள் சங்க நிகழ்ச்சியில் பங்கெடுத்த போது, அதில் அவர் சனாதனம் குறித்துப் பேசிய கருத்து சர்ச்சைக்குள்ளானது.

தமிழக எல்லையைக் கடந்து இந்தியா முழுவதுமே அதற்கு எதிர்ப்பு கிளம்பியது. மத நம்பிக்கைகளைப் புண்படுத்திவிட்டார் என்று கூறி டெல்லி, உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும்கூட புகார்கள் கொடுக்கப்பட்டன. இதுதொடர்பாக நீதி மன்றத்தின் கண்டிப்பையும் அவர் எதிர் கொள்ள நேரிட்டது.

இதேபோல், குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மூ பழங்குடி சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதால்தான் புதிய நாடாளுமன்ற கட்டட திறப்பு விழாவுக்கு அழைக்கப்படவில்லை என்று கூறி உதயநிதி ஸ்டாலின் சனாதனத்தைத் தொடர்புபடுத்தி முன்வைத்த விமர்சனங்களுக்கும் எதிர்ப்புகள் கிளம்பின.

சனாதனம் குறித்த பேச்சுகளுக்கு தேசிய அளவில் எதிர்ப்பு கிளம்பினாலும் கூட, திமுக தொண்டர்கள், ஆதரவாளர்கள், சமூக நீதி பேசும் அமைப்புகள் மத்தியில் உதயநிதி ஸ்டாலினின் செல்வாக்கு கணிசமாக அதிகரித்தது.

சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட போது தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தின் படி, அவர் மீது 22 வழக்குகள் நிலுவையில் இருந்தன.

சென்னையில் அண்மையில் ஃபார் முலா 4 கார் பந்தயம் நடத்தப்பட்டதில் உதயநிதி ஸ்டாலின் மீது விமர்சனங்கள் எழுந்தன. நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டது. எதிர்ப்புகள், வழக்குகளைக் கடந்து வெற்றிகரமாக நடந்து முடிந்த ஃபார்முலா 4 கார் பந்தயம் உதயநிதி ஸ்டாலினுக்கு விமர்சனங்களையும் பாராட்டுகளையும் ஒருசேரப் பெற்றுத் தந்தது.

## "இனிய உதயமே வருக!"



வாக்களித்த மக்கள் மன மகிழ்ச்சி அடையும் அளவுக்கு, வாக்களிக்க மறந்தவர்களும் போற்றிப் பாராட்டும் அளவுக்கு, எதிரிகளும் குறை சொல்லத் தயங்கும் அளவுக்கு, துரோகிகளும் பொறாமையால் வெம்பும் அளவுக்கு, இந்தியாவின் அனைத்து மாநிலங்களும் வியந்து பார்க்கும் அளவுக்கு, உலகின் பல்வேறு நிறுவனங்களையும் ஈர்க்கும் அளவுக்கு, 'திராவிட மாடல்' ஆட்சியை வழங்கி வருகிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். இப்பயன் மிகு ஆட்சிக்கு திறன்மிகு துணை முதலமைச்சராக உதயநிதி அவர்களை நியமித்திருக்கிறார் முதலமைச்சர்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல் — என்கிறார் வள்ளுவர். இந்தச் செயலை, இன்ன காரணத்தால் யார் செய்து முடிப்பார் என்பதை ஆராய்ந்து, அந்தச் செயலை அவரிடமே வழங்குமாறு கட்டளையிட்டுச் சொல் கிறது வள்ளுவ அறம். அத்தகைய அறக்கடமையின் பாற்பட்டதாக இருக்கிறது முதலமைச்சரின் தேர்வு!

ஒற்றைச் செங்கல் மூலமாக, ஒன்றிய அரசையே நடு நடுங்க வைத்தவர் உதயநிதி. ஒற்றைச் சொல்லின் மூலமாக சனாதனக் கும்பலையே பதற வைத்தவரும் அவர்தான். தெளிவான கொள்கையும், அதற்கான துணிச்சலும் இருப்பவர்கள் விதைத்ததும் முளைப்பார்கள் என்பதற்கு உதாரணம்தான் உதய நிதி. கலைஞரால் அடையாளப்பட்ட இன்றைய முதலமைச்சராக இருந்தாலும், இன்றைய முதலமைச்சரால் அடையாளம் காட்டப்பட்ட உதயநிதியாக இருந்தாலும்—பேராசிரியர் ஒரு முறை குறிப்பிட்டதைப் போல 'திறமையால் தகுதி பெற்றவர்கள்.'இவர்கள் தகுதிக்குரியவர்களாக இருப்பதால்தான் எதிர்க்கப்படுகிறார்கள்.

'வெறுக்கப்படுபவனே வெற்றி பெறுவான்' என்று சொன்னவர் தந்தை பெரியார். திராவிட இயக்கம் என்பதே வெறுத்தவர்களால் வளர்ந்ததே. எதிர்ப்பில் வளர்ந்த இயக்கம். அதனால்தான் அனைத்தையும் தாங்கி நிற்கிறது. இவை அனைத்தும் புதிதல்ல. இதைப் பற்றிக் கவலைப்படாமல் உழைத் ததில்தான் அமைச்சர் உதயநிதி அவர்களின் வெற்றி அடங்கி இருக்கிறது.

**மரம் வளர்ப்போம்**
**மழை பெறுவோம்!**



# செந்தில் பாலாஜி ஜாமீனில் வந்திருப்பது தி.மு.க.வுக்கு பலமா? பலவீனமா?

முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, 471 நாட்களைச் சிறையில் கழித்த நிலையில், பல்வேறு சட்டப் போராட்டங்களுக்குப் பிறகு உச்ச நீதிமன்றத்தில் பிணை கிடைத்து தற்போது மீண்டும் தமிழக அமைச்சராகியுள்ளார்.

அவர் தொடர்பான வழக்கில், அமலாக்கத் துறையின் அடுத்தகட்ட முயற்சிகள் எப்படியிருக்கும், வழக்கின் நகர்வுகள் எந்தத் திசையில் இருக்கும் என்பது பற்றிய விவாதங்கள் சூடுபிடிக்கத் துவங்கியுள்ளன.

அது ஒருபுறமிருக்க, நீண்ட இடைவெளிக்குப் பிறகு அவர் மீண்டும் வெளியில் வந்திருப்பது, திமுகவினரிடையே குறிப்பாக கோவை மண்டல திமுகவினரிடம் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதை வெளிப்படுத்தும் விதமாக, கோவை, கரூர் உள்ளிட்ட மேற்கு மண்டலத்துக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளிலும் அக்கட்சியினர், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும், பட்டாசுகளை வெடித்தும் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

ஆனால் இது தற்காலிகமான ஆசுவாசம் தான், இந்த வழக்கிலிருந்து செந்தில் பாலாஜியால் தப்பவே முடியாது என்கிறார் பாரதிய ஜனதா கட்சியின் மாநிலப் பொதுச்செயலாளர் ஏ.பி.முருகானந்தம்.

இதற்கு முற்றிலும் முரணாக, “உதயநிதி துணை முதலமைச்சராகக் காத்திருக்கிறார், மோடியை ஸ்டாலின் சந்திக்கிறார், செந்தில் பாலாஜி பிணையில் வெளியே வந்துள்ளார். இந்த மூன்றையும் நாங்கள் இணைத்துப் பார்க்கிறோம்” என்கிறார் அதிமுக செய்தித் தொடர்பாளர் சத்யா.

செந்தில் பாலாஜி சிறைக்குச் செல்லும் போது அமைச்சராக இருந்தார். ஆனால், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், ‘ஒரு சாதாரண அரசுப் பணியாளர் 48 மணிநேரத்திற்கு மேல் சிறையில் இருந்தால் இடைநீக்கம் செய்யப்படுகிறார்’ என்பதைச் சுட்டிக்காட்டி கேள்வி எழுப்பினார்.

அதைத் தொடர்ந்து, தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார் செந்தில் பாலாஜி. கடந்த பிப்ரவரி 13ஆம் தேதியன்று அவரது



ராஜினாமா ஏற்கப்பட்டது.

இந்நிலையில், அவர் வெளியில் வந்த தும் மீண்டும் அமைச்சராகியுள்ளது தி.மு.க.வினரிடையே புதிய உற்சாகமும் உத்வேகமும் எழுந்துள்ளது.

### கோவையில் திமுகவுக்கு கிடைத்த பலன்கள்

கோவையில் கடந்த சட்டமன்றத் தேர்தலில், 10 தொகுதிகளிலும் திமுக தோல்வி யைத் தழுவியது. அதிமுக கூட்டணி, அனைத்துத் தொகுதிகளையும் கைப்பற்றி யது. ஜெயலலிதா இருந்தபோதும்கூட, 2011 சட்டமன்றத் தேர்தலில் பத்தில் ஒரு தொகுதியில் திமுக வென்ற நிலையில், அவர் மறைவுக்குப் பின், கோவை மாவட்டத்தில் அனைத்துத் தொகுதிகளிலும் திமுக தோற்றதால், மாநிலத்தில் பத்து ஆண்டுகளுக்குப் பின் திமுக ஆட்சியைப் பிடித்தும், கோவை மாவட்டத்துக்கு அமைச்சரவையில் இடம் கிடைக்காமல் போனது.

அதனால் மாவட்டத்துக்கான பொறு ப்பு அமைச்சராக உணவுப் பாதுகாப்புத் துறை அமைச்சர் சக்கரபாணி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் இளித்துரை ராமச்சந்திரன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

ஆனால் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்பு, இருவருக்கும் பதிலாக, அப்போது அமைச்சராக இருந்த செந்தில் பாலாஜியிடம் கோவை மாவட்டத்தின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

அந்தத் தேர்தலில் கோவை மாநக ராட்சி, பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம் நகராட்சிகள் உட்படப் பெரும்பான்மை யான நகர்ப்புற உள்ளாட்சிப் பதவிகளை திமுக கைப்பற்றியது. அதற்குப் பிறகே, செந்தில் பாலாஜி சிறை சென்றார். தற்போது கோவை மாவட்டத்துக்கான பொறுப்பாளராக அமைச்சர் முத்துசாமி இருக்கிறார்.

### செந்தில் பாலாஜி வருகை திமுகவுக்கு வலு சேர்க்குமா?

சிறைக்குள் செந்தில் பாலாஜி இருந்த போது நடந்த நாடாளுமன்றத் தேர்தலில், தமிழகம் முழுவதும் திமுக கூட்டணி வென்ற போதிலும், கோவை தொகுதியில் பாரதிய ஜனதா மாநிலத் தலைவர் அண்ணாமலையை வென்றது பெரிதும் பேசப்பட்டது.

அதிலும் வேட்பாளர் தேர்வு உட்பட தேர்தல் பணிகளில் செந்தில் பாலாஜியின் பரிந்துரையும், ஆலோசனையும் இருந்ததாக, தேர்தலில் கிடைத்த வெற்றிக்குப் பின், கோவை திமுகவினரே சமூக ஊடகங்களில் பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில், “அவருடைய மீள் வருகை, மேற்கு மண்டலத்துக்கு, குறிப்பாக கோவை திமுகவுக்கு பெரும் ஊக்கத்தை அளிக்குமென்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கிறார்” கோவை நாடாளுமன்ற உறுப்பினர் ராஜ்குமார்.

“கடந்த உள்ளாட்சித் தேர்தலில், கோவையில் திமுகவுக்கு அசாத்தியமான வெற்றியைத் தேடித் தந்ததில் செந்தில் பாலாஜியின் பங்களிப்பு மகத்தானது. நீண்ட இடைவெளிக்குப் பின், அவர் மீண்டும் வந்திருப்பது, கோவைக்கு மட்டுமின்றி மேற்கு மண்டலம் முழுவதுமே திமுகவுக்கு மிகப் பெரிய எழுச்சியைத் தரும்" என்கிறார் அவர்.

"கடந்த இரண்டு தேர்தல்களிலும் திமுக மகத்தான வெற்றியைப் பெற்றது போலவே, வரும் சட்டமன்றத் தேர்தலிலும் மாபெரும் வெற்றியைப் பெறுவதற்கு அவ ரது வருகை, நல்ல துவக்கமாக இருக்கும். கோவையின் மீது முதல்வர் ஸ்டாலின் தனி அக்கறை காட்டி வரும் நிலையில், இங்கு செந்தில் பாலாஜி களத்தில் இருந்து பணி செய்யும்போது, பெரும் பக்கபலமாக இருப்பார். அவர் மீண்டும் அமைச்சராவார் என்ற எதிர்பார்ப்பும் எல்லாத் தரப்பிலும் எழுந்துள்ளது. அது நிச்சயமாக நடக்கு மென்று நம்புகிறோம்” என்று கோவை எம்.பி. ராஜ்குமார் தெரிவித்தார்.

செந்தில் பாலாஜியின் வருகை, கோவை மண்டல திமுகவுக்கு பெரும் பலம் சேர்க்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை என்று கூறும் ராதாகிருஷ்ணன், “எடப்பாடி பழனிசாமி, முன்னாள் அமைச்சர்கள் வேலுமணி, தங்கமணிக்கு நிகராக கோவை மண்டலத்தில் அரசியல் செய்வதற்கு செந்தில் பாலாஜிதான் சரியான நபர் என்பது ஏற்கெனவே அரசியல் ரீதியாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதனால் அவரின் வருகை கோவை திமுகவுக்கு நிச்சயமாக வலு சேர்க்கும்," என்று குறிப்பிடுகிறார் மூத்த பத்திரிகையாளர் ஆர்.கே. ராதாகிருஷ்ணன்.

எல்லாவற்றையும்விட, செந்தில் பாலாஜியின் விவகாரத்தில் முதல்வர் ஸ்டாலின் ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்தி இருப்பதாகக் குறிப்பிடும் மூத்த பத்திரிகையாளர் ராதாகிருஷ்ணன், "பாரதிய ஜனதா அரசு அல்லது வேறு எந்தத் துறை எவ்வளவு நெருக்கடி கொடுத்தாலும், திமுகவை சேர்ந்தவரைக் கைவிட மாட்டேன் என்பதை ஸ்டாலின் உணர்த்தியிருப்பதாக" கூறுகிறார்.

‘‘திமுகவின் வெற்றிக்கு அவருடைய உழைப்பு நிச்சயம் தேவை. அது கண்டிப் பாகப் பயன்படும். அவரின் உழைப்பு பெரிதும் மதிக்கத் தக்கது. அது கோவை மண்டலத்துக்கு வலு சேர்த்தது என்பதிலும் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால் திமுகவை பொறுத்தவரை, எந்தத் தனிநபரையும் நம்பி இருக்கவில்லை. எம்ஜிஆர் இந்த இயக்கத்தைவிட்டுப் போனபோதே, கவலைப்படதில்லை. இது ஓர் இயக்கம், இங்கே எல்லாமே கூட்டு முயற்சிதான். அவருடைய வருகை, கூடுதல் பலம்தான்” என்றார் திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி,

### இது திமுக, பாஜக இணக்கத்தின் அறிகுறியா?

இதற்கு முற்றிலும் முரணாக, இந்தப் பிணைக்குப் புதியதொரு கோணத்தில் காரணத்தை விளக்குகிறார், அதிமுக செய்தித் தொடர்பாளர் சத்யா. இது குறித்து அவர் கூறுகையில், “உதயநிதி துணை முதல்வராகக் காத்திருக்கிறார், மோடியை ஸ்டாலின் சந்திக்கிறார், செந்தில்பாலாஜி பிணையில் வெளியே வந்துள்ளார். இந்த மூன்றையும் நாங்கள் இணைத்துப் பார்க்கிறோம். இவை அனைத்துமே, திமுகவுக்கும், பாரதிய ஜனதாவுக்குமான ரகசிய உறவையே காட்டுகிறது. அது மெல்ல மெல்ல வெளிப்பட ஆரம்பித்திருப்பதாக” கூறுகிறார் சத்யா.

இரண்டு முறை பெரும்பான்மையுடன் இருந்த பாரதிய ஜனதா, இந்தமுறை போதிய பலம் இல்லாமல் தவிப்பதாகக் கூறிய அவர், பாஜக அதனால் யார் மீது பத்து ஆண்டுகளாகக் கடுமையாகக் குற்றம் சாட்டியதோ, அவர்களிடமெல்லாம் ஒருவித இணக்கத்தைக் காண்பித்து வருவதாகத் தனது கருத்தை முன்வைத்தார்.

**மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்!**

# கூல் லிப், குட்கா, புகையிலை போன்ற போதைப் பொருட்களுக்கு நிரந்தர தடை விதிக்க வேண்டும்!

## உயர்நீதிமன்ற மதுரை கிளை விருப்பம்!



உயர் நீதிமன்ற மதுரை அமர்வுக்கு உட்பட்ட மாவட்டங்களில் தமிழக அர சால் தடை செய்யப்பட்ட குட்கா, புகை யிலை, ஹான்ஸ் போன்ற போதைப் பொருட்களை விற்றதாக பதிவு செய்யப் பட்ட வழக்குகளில் ஜாமீன், முன் ஜாமீன் கோரி தாக்கலான மனுக்கள் நீதிபதி பரத சக்கரவர்த்தி முன்பு விசாரணைக்கு வந்தது. தமிழக அரசு தரப்பில் கூடுதல் தலைமை வழக்கறிஞர் வீரா கதிரவன், குற்றவியல் வழக்கறிஞர் அன்புநிதி ஆகியோர் வாதிடு கையில்,

“தமிழக அரசு தமிழகத்தில் கூல் லிப், குட்கா புகையிலை பொருட்களை முற்றி லும் தடை செய்துள்ளது. இருந்தபோதும் அண்டை மாநிலங்களில் இருந்து விற்பனை செய்வதற்காக சட்ட விரோதமாக கொண்டு வருகின்றனர். இது கடுமையான நடவடிக்கை மூலம் தடுக்கப்பட்டு வருகி றது. அதனையும் மீறி விற்பனை செய்த 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

பலர் மீது வழக்குப் பதிவு செய்து தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த விவகாரத்தில் மத்திய அரசு உரிய முடிவு எடுக்க வேண்டும். பக்கத்து மாநில அரசுகளுக்கும் தமிழக அரசு கடிதம் எழுதி உள்ளது. குட்கா பொருட்களின் உற் பத்திக்கு தடை விதிக்க வேண்டும் என்றும் சட்டவிரோதமாக தமிழகத்திற்குள் குட்கா புகையிலை பொருள்கள் விற்பனை செய்ப வர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக சுகாதாரத்துறை சார்பில் கடி தம் அனுப்பப்பட்டுள்ளது” என வாதிட்டனர்.

மத்திய அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், “கூல் லிப், குட்கா வகை பொருட் கள் வேறு மாநிலங்களில் அனுமதி பெற்று தயாரிக்கப்படுகிறது. தமிழகத்தின் எந்த தயாரிப்புக்கும் அனுமதி வழங்க வில்லை. மேலும், இவர்களுக்கு பல்வேறு கட்டுப்பா டுகளையும் மத்திய அரசு விதித்து வருகி றது.” என்றார்.


இருதரப்பு வாதங்களையும் பதிவு செய்த நீதிபதி, “தற்போது கூல் லிப், குட்கா புகையிலைப் பொருட்களை இளைஞர் களை தாண்டி, பள்ளி மாணவர்களும் அதிகம் பயன்படுத்து கிறார்கள். இவர்களை பாதிக்கக்கூடிய அளவிற்கு விற்பனை நடைபெற்று வருகிறது. பல பள்ளி மாணவர் கள் இதனை தொடர்ந்து பயன்படுத்தி வரு கின்றனர். இதனால் பள்ளி மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது. மேலும், உடல் நலமும் பாதிக்கப் பட்டு வாய் புற்றுநோய் பாதிப்புக்கு உள்ளாக கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. பள்ளி மாணவர்களை பாது காக்க வேண்டும். அரசு கள்ளச் சாராயம், கஞ்சா மற்றும் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் விற்பனை செய்ப வர்கள் மீது எவ்வாறு குண்டர் சட்டத்தைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்கிறார் களோ அதே போல கடுமையான நடவடிக் கைகள் எடுத்தால் மட்டுமே இதனை முற்றிலும் தடை செய்ய முடியும். எனவே இந்த நீதிமன்றம் மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு விரைவில் போதைப் பொருட் களை தடை செய்வது குறித்து உரிய வழிமுறைகளை பிறப்பிக்க உள்ளது” எனக் கூறி தீர்ப்புக்காக வழக்கை ஒத்திவைத்தார்.

# வெள்ளி கிரக ஆய்வுக்காக 2028-ல் வீனஸ் விண்கலம் ஏவப்படும்!

விண்வெளி அறிவியல் ஆய்வில் சந்திரயான், மங்கள்யான், ஆதித்யா, ஆஸ்ட்ரோசாட் உட்பட பல்வேறு முன்னெடுப்புகளை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) மேற்கொண்டு வருகிறது. அந்தவகையில் சூரிய குடும்பத்தில் பூமிக்குமிக அருகில் உள்ள வெள்ளி கிரகத்தை ஆய்வு செய்வதற்காக வீனஸ் விண்கலத்தை அனுப்புவதற்கு இஸ்ரோ திட்டமிட்டு வந்தது. சமீபத்தில் இந்த திட்டத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்து ரூ.1,236 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை அடுத்து பணிகளை இஸ்ரோ தொடங்கியுள்ளது. இந்நிலையில், வீனஸ் விண்கலம் 2028 மார்ச் 29—ம் தேதி விண்ணில் ஏவப்படும் என்று இஸ்ரோ அறிவித்துள்ளது.

இதுகுறித்து இஸ்ரோ வெளியிட்ட அறிவிப்பு: வெள்ளி கிரகத்தை ஆய்வு



செய்வதற்காக வீனஸ் ஆர்பிட்டர் மிஷன் திட்டம் மூலமாக விண்கலம் தயாரித்து அனுப்பப்பட உள்ளது. இந்த விண்கலத்தில் மொத்தம் 19 அதிநவீன ஆய்வுக் கருவிகள் இடம்பெறும். அதில் 16 கருவிகள் உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட உள்ளன. எஞ்சிய 3 சாதனங்கள் இந்தியா, ரஷ்யா, ஜெர்மனி, சுவீடன் ஆகிய நாடுகளின் பங்களிப்பில் வடிவமைக்கப்பட இருக்கின்றன.

அனைத்து தயாரிப்பு பணிகளையும் முடித்து விண்கலத்தை எல்விஎம்—3 ராக்கெட் மூலமாக 2028 மார்ச் 29—ம் தேதி விண்ணில் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது. சுமார் 112 நாட்கள் பயணத்துக்கு பின்னர் ஜூலை 19—ம் தேதி வெள்ளி கிரகத்தை சென்றடையும்.

அதன்பின்னர் வெள்ளி கிரகத்தின் மேற்பரப்பில் இருந்து குறைந்தபட்சம் 500 கி.மீ தூரமும்,அதிகபட்சம் 60,000 கி.மீ தூரமும் கொண்ட நீள்வட்ட சுற்றுப்பாதையில் விண்கலம் நிலைநிறுத்தப்படும். அங்கிருந்தபடியே வெள்ளி கிரகத்தை வலம் வந்துஅதன் வளிமண்டலம், மேற்பரப்பு மற்றும் இதர புவியியல் அம்சங்களை ஆய்வு செய்து தரவுகளை வழங்கும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.




# தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளது-ஐகோர்ட் நீதிபதி ஆர்.விஜயகுமார் பேச்சு

"அனைத்தும் இயந்திரமயமாகி விட்ட இன்றைய சூழலில் தொழிலாளர் களின் பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு கேள்வி குறியாகியுள்ளது" என உயர் நீதிமன்ற நீதிபதி ஆர்.விஜயகுமார் தெரிவித்தார்.

மதுரை அரசு சட்டக் கல்லூரியில் இந்தியாவில் தொழிலாளர்கள் சந்தித்து வரும் சமூகப் பாதுகாப்பு பிரச்சினையின் பல்வேறு வடிவங்கள் என்ற தலைப்பில் ஒருநாள் தேசிய கருத்தரங்கு நடைபெற்றது. சட்டக் கல்லூரி முதல்வர் குமரன் தலைமை வகித்தார்.

இதில் உயர் நீதிமன்ற நீதிபதி ஆர்.விஜயகுமார் பேசியது:

"இந்தியாவில் சமூகப் பாதுகாப்பு என்பது சட்டங்கள் மூலம் வரவில்லை. இந்தியாவில் குடும்ப பாரம்பரியத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கும் பலவீனமான நபர்கள் குடும்பம் மற்றும் சமூகத்தால் பாதுகாக்கப்பட்டு வந்தனர்.

கூட்டுக் குடும்பங்கள் சிதைந்து தொழில் நிமித்தமாக கிராமங்களில் இருந்து வெவ்வேறு நகரங்களுக்கு இடம் பெயர்ந்து தங்களுக்கு தொடர்பில்லாதவர்களின் கீ?ழ் பணிபுரியும் போது சமூகப் பாதுகாப்பு என்பது அவசியமாகிறது. இவற்றைக் கருத்தில் கொண்டு தான் தொழிலாளர் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு சட்டங்கள் இயற்றப்பட்டன. சுதந்திர இந்தியாவுக்கு முன்பும் பல்வேறு சட்டங்கள் இருந்தன. அந்த சட்டங்களை தொழிலாளர்கள் புரிந்து கொள்வதில் பல்வேறு குழப்பம் நிலவியது. இதனால் 40—க்கும் மேற்பட்ட சட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு, ஒருங்கி ணைக்கப்பட்டு 4 சட்டங்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இந்த சட்டங்கள் வெவ்வேறு வடிவங்களில் அமலுக்கு வர காத்திருக்கின்றன.

சமூக பாதுகாப்பை வேறு கோணத்தி லும் பார்க்க வேண்டும். 1990— 91—ம் ஆண்டுக்கு பிறகு இந்தியாவில் ஏற்பட்ட புதிய பொருளாதார கொள்கை தொழிலாளர்களின் வாழ்க்கையைப் புரட்டிப் போட் டது. 2010—க்குப் பிறகு ஏற்பட்ட டிஜிட்டல் புரட்சியும் தொழிலாளர்களின் நிலையை மாற்றியுள்ளது. அனைத்தும் இயந்திரமயமாகியுள்ள இன்றைய சூழ்நிலையில் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக, பெண்களும் வேலைக்குச் செல்லும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் பெண்களின் பாதுகாப்புக்காக வீடுகள், பணியிடங்கள் மற்றும் வெளியிடங்களில் பெண்களை பாதுகாக்கும் வகையில் தனித் தனி சட்டங்கள் இயற்றப்பட்டன. குழந்தைத் தொழிலாளர், கொத்தடிமை தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்களையும் சமூகப் பாதுகாப்பு சட்டங்களாகவே கருத வேண்டும்.

கடந்த 6 மாதமாக ஒரு விவாதம் நடைபெற்று வருகிறது. 8 மணி நேரம் வீதம் 6 நாள் 48 மணி நேரமாக இருந்து வரும் வேலையை 70 மணி நேரமாக உயர்த்த வேண்டும் என்ற விவாதம் நடைபெற்று வருகிறது. கடும் வேலை நெருக்கடி காரணமாக, 2 தகவல் தொழில் நுட்ப ஊழியர்கள் உயிரிழந்துள்ளனர். இவற்றை மனதில் வைத்து சமூகப் பாதுகாப்புச் சட்டங்களை கூர்ந்து கவனிக்க வேண்டியதுள்ளது.

தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்கும் இரு பெரிய சட்டங்களாக பிஎஃப் சட்டம் மற்றும் இஎஸ்ஐ சட்டங்கள் உள்ளன. எனவே, சட்ட மாணவர்கள் சட்டங்களை வெறும் எழுத்துக்களாக, சொற்றொடர்களாக படிக்காமல் அந்த சட்டங்களைக் கொண்டு வர வேண்டிய சூழ்நிலை ஏன் வந்தது. அதன் பின்னால் உள்ள வரலாறு என்ன? ஏன் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன? என்பதற்கான காரணத்தையும் அறிந்து படிக்க வேண்டும்" என்று அவர் பேசினர்.

# ஆம்ஸ்ட்ராங் கொலையில் அவிழ்ந்த மர்ம முடிச்சுகள்! குற்றப்பத்திரிகையில் சொல்லியிருப்பது என்ன?



ஆம்ஸ்ட்ராங் கொலை தொடர்பாக எழும்பூர் நீதிமன்றத்தில் சுமார் 5,000 பக்கங் களை கொண்ட குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், ஆம்ஸ்ட்ராங் கொலை செய்யப்பட்டது எப்படி என்பது மட்டும் அல்லாமல், குற்றப்பத்திரிகை மூலம் பல்வேறு மர்ம முடிச்சுகளும் அவிழ்ந்துள்ளன.

ஆம்ஸ்ட்ராங் கொலை தொடர்பாக எழும்பூர் நீதிமன்றத்தில் சுமார் 5 ஆயிரம் பக்கங்களை கொண்ட குற்றப்பத்திரிகையை போலீஸார் தாக்கல் செய்தனர். அதில், பிர பல ரவுடியான சம்போ செந்தில் மற்றும் மொட்டை கிருஷ்ணன் தேடப்படும் குற்றவாளிகள் என குறிப்பிட்டதோடு, அவர்களின் பெயர்கள் உட்பட 30 பேரின் பெயர்கள் குற்றப்பத்திரிகையில் இடம்பெற்றுள்ளன. அது மட்டும் அல்லாமல் ஆம்ஸ்ட்ராங் கொலை தொடர்பான மர்ம முடிச்சுகள் அவிழ்க்கப்பட்டுள்ளன.

குற்றப்பத்திரிகையில் முதல் நபராக, வட சென்னையை கலக்கிய பிரபல தாதா நாகேந்திரன் பெயர் இடம்பெற்றுள்ளது. அவர், தற்போது ஆயுள் சிறை கைதியாக வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இரண்டாவதாக, ஏற்கெனவே கொலை செய்யப்பட்ட பிரபல ரவுடி ஆற்காடு சுரேஷின் தம்பி பொன்னை பாலு, அடுத்ததாக நாகேந்திரனின் மகன் அஸ்வத்தாமன் என பட்டியல் அடுத்தடுத்து நீள்கிறது.

இது குறித்து போலீஸ் தரப்பில் கூறப்படுவதாவது:

ஆம்ஸ்ட்ராங் அரசியல் ரீதியிலும், சமூக ரீதியிலும் அதிவேகமாக வளர்ந்துள் ளார். ஒரு காலத்தில் வடசென்னையில் தாதாவாக வலம் வந்த நாகேந்திரனுக்கு இது பிடிக்கவில்லை. அவர்களுக்குள் முன் பகையும் இருந்துள்ளது. மேலும், தனது மகனான அஸ்வத்தாமனுடன் நிலம் தொடர்பாக ஆம்ஸ்ட்ராங் பிரச்சினை செய்துள்ளார். அதுமட்டும் அல்லாமல் மகன் கைது செய்யப்பட்டதற்கு ஆம்ஸ்ட்ராங்தான் காரணம் எனவும் நாகேந்திரன் நம்பி உள்ளார்.

இதனால், அவரை தீர்த்துக்கட்ட முடிவு செய்த நாகேந்திரன், சிறையில் இருந்தபடியே கொலை திட்டத்தை வடிவமைத்துள்ளார். ஆம்ஸ்ட்ராங்கிற்கு எதிரானவர்களைத் தேடி உள்ளார். அப்போது தான், ரவுடி ஆற்காடு சுரேஷ் கொலைக்கு, அவரது தம்பி பொன்னை பாலு ஆம்ஸ்ட்ராங் மீது வன்மத்தில் இருப்பது தெரியவந்தது.

மேலும், பிரபல ரவுடியான சம்போ செந்திலும் ஆம்ஸ்ட்ராங் மீது பகையில் இருந்துள்ளார். இதையடுத்து, கொலை திட்டத்தை சிறையில் இருந்தவாறே நாகேந்திரன் விரிவுபடுத்தியுள்ளார்.

அதன்படி, நேரடியாக களத்தில் சென்று கொலை செய்யும் பொறுப்பு பொன்னை பாலு தரப்பினருக்கும், பணத்தின் ஒரு பகுதியை கொடுப்பதோடு நாட்டு வெடிகுண்டு உட்பட கொலைக்கான ஆயுதங்களை ஏற்பாடுசெய்யும் பொறுப்பு சம்போ செந்திலிடமும், அனைவரையும் ஒருங்கிணைக்கும் பொறுப்பு அஸ்வத்தாமனிடமும் கொடுக்கப்பட்டுள்ளது.

கொலை திட்டம் வெளியே கசிந்து விடாமல் இருக்க, செல்போன் தொடர்பு எண்களின் ஐ.பி முகவரியை கண்டுபிடிக்க முடியாதபடி வி.பி.என். தொழில்நுட்பத்து டன் உரையாடல்கள் நடைபெற்றுள்ளன. கொலையாளிகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பணி வழங்கப்பட்டு 6 மாத தொடர் கண்காணிப்புக்குப் பிறகு, யாருக் கும் சந்தேகம் வராதபடி ஆன்லைன் உணவு டெலிவரி ஊழியர்கள் போல் சென்று ஆம்ஸ்ட்ராங்கை தீர்த்துக் கட்டியுள்ளனர். வேலூர் சிறையில் இருந்து நாகேந்திரன் சிகிச்சைக்கு வெளியே வரும்போது ஒன்று கூடி கொலை திட்டம் குறித்து கொலையா ளிகள் விவாதித்துள்ளனர். மேலும், ஆம்ஸ் ட்ராங்கை கொலை செய்ய ரூ.10 லட்சம் வரை கொலை யாளிகள் செல விட்டுள்ளனர் என போலீஸார் தெரிவித்தனர்.

முன்னதாக, பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் (52) கடந்த ஜூலை 5—ம் தேதி சென்னை பெரம்பூரில் அவரது வீட்டருகே கொலை செய்யப்பட்டார். இந்த படுகொலை தொடர்பாக செம்பியம் போலீஸார் வழக்குப் பதிந்து பிரபல ரவுடி ஆற்காடு சுரேஷின் தம்பி பொன்னை பாலு உட்பட 28 பேரை அடுத்தடுத்து கைது செய்தனர். இவர்களில் 25 பேர் மீது குண்டர் சட்டத்தில் நட வடிக்கை எடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவ ரான திருவேங்கடம் என்கவுன்ட்டர் செய் யப்பட்டார். ஆம்ஸ்ட்ராங் கொலைக்கான காரணங்கள் குறித்து பல்வேறு தகவல்கள் உலாவந்த வண்ணம் இருந்தன. ஆனால், உறுதியான தகவல்கள் வெளியிடப்பட வில்லை.

இந்த நிலையில், குற்றப்பத்திகையை நீதிமன்றத்தில் 90 நாட்களுக்குள் தாக்கல் செய்யவேண்டும் என்பதால் குற்றப் பத்தி ரிகை நீதிமன்றத்தில் தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கொலை தொடர்பாக மேலும் தகவல் கிடைத்தால் கூடுதல் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் எனவும் போலீஸார் தெரிவித்தனர்.



# ஏழை எளிய மக்களுக்காக 65 ஆண்டு காலம் மருத்துவ சேவையாற்றிய ஆம்பூர் மருத்துவர் ஆலீஸ் ஜி.பி.ராயர் காலமானார்!

ஏறத்தாழ 65 ஆண்டுகள் ஏழை, எளிய மக்களுக்கு மருத்துவ சேவையாற்றிய ஆம்பூ ரின் ‘அன்னை தெரேசா’ என அழைக்கப் படும் மருத்துவர் ஆலீஸ் ஜி.பிராயர்(86) உடல் நலக்குறைவால் வேலூரில்உள்ள தனியார் மருத்துவமனையில் நேற்று கால மானார்.

அமெரிக்காவைச் சேர்ந்தவர் கெட் லெட் பிராயர். இவர் நாகர்கோயிலில் உள்ள தேவாலயத்தில் போதகராகப் பணி யாற்ற கடந்த 1936—ம் ஆண்டு வந்தார். இவ ருக்கு இரட்டையர்களாகப் பிறந்த 2 மகள் கள், ஒரு மகன் இருந்த நிலையில் 1938—ம் ஆண்டு கடைசி மகளாக ஆலீஸ் ஜி.பிராயர் பிறந்தார்.

நாகர்கோயிலில் குழந்தைப் பருவத்தை கடந்த ஆலீஸ் ஜி.பிராயர் கொடைக்கான லில் தொடக்கக் கல்வியை முடித்தார். அதன்பிறகு கல்லூரி மற்றும் மருத்துவக் கல்வியை அமெரிக்காவில் முடித்து 1968ம் ஆண்டு இந்தியா வந்தார்.

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரில் உள்ள பெதஸ்டா மருத்துவமனையில் மருத்துவப் பணியில் சேர்ந்தார். அங்கு வந்த கிராம மக்கள் மிகவும் ஏழ்மை நிலை யில் இருந்ததால் அவர்களுக்கான மருத்துவ சேவையைத் தொடங்கிய ஆலீஸ் ஜி.பிரா யர், தனி ஒருவராக கிராமம், கிராமமாகச் சென்று ஏழை, எளிய மக்களுக்கு மருத்துவ சேவையை வழங்கினார்.

‘ஆம்பூரின் அன்னை தெரேசா’ — கிராம மக்களின் அன்பைப் பெற்ற ஆலீஸ் ஜி.பிராயரை ‘ஆம்பூரின் அன்னை தெரேசா’ என மக்கள் அன்போடு அழைக்க தொடங்கினர். இதுமட்டுமின்றி திரும ணமே செய்து கொள்ளாமல் ஏழை, எளிய மக்களுக்கு பல்வேறு மருத்துவ சிகிச் சையை வழங்கிய ஆலீஸ் ஜி.பிராயரை ‘மிஸ் ஸியம்மா’ என்றும் மக்கள் அழைக்க தொடங்கினர். இவரது மருத்துவ சேவை யைப் பாராட்டி பல்வேறு நிறுவனங்கள் இவருக்கு பல விருதுகளை வழங்கி கவுரவப்படுத்தி உள்ளன.

“தம் வாழ்வின் பெரும் பகுதியை இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் செல வழித்து, தன் சுயவாழ்க்கையைப் பற்றி கவ லைப்படாமல் பிறருக்காகவே வாழ்நாள் முழுவதும் சேவை ஆற்றியவர் ஆலீஸ் ஜி.பி ராயர். வளர்ப்புப் பிராணிகள் மீதும் பேர ன்பு கொண்டிருந்தார்” என ஆம்பூர், வாணி யம்பாடி மக்கள் புகழாரம் சூட்டி வந்தனர்.

இந்நிலையில், 86 வயதான அவருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டு கடந்த 24—ம் தேதி வேலூரில் உள்ள தனியார் மருத் துவ மனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவரது உயிர் மருத்துவமனையிலேயே பிரிந்தது. இதைக் கேள்விப்பட்டதும் ஆம்பூர் நகரம் சோகத்தில் மூழ்கியது. பல இடங்களில் போஸ்டர் ஒட்டியும், ஆலீஸ் ஜி.பிராயர் உருவப்படத்துக்கு மெழுகுவர்த்தி ஏற்றி வைத்தும் மக்கள் இறுதி அஞ்சலி செலுத் தினர்.

# இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் ரயில் டிசம்பர் மாதம் சோதனை ஓட்டம்!

ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்வீடன் மற்றும் சீனாவில் ஹைட்ரஜன் எரிபொருள் ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்நிலையில் ஹைட்ரஜன் ரயில் தயாரிக்கும் பணியில் இந்தியாவும் இறங்கியுள்ளது. சென்னையில் ஐசிஎப் தொழிற்சாலையில், ஹைட்ரஜன் எரிபொருள் ரயிலை ஒருங்கிணைக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஹைட்ரஜன் ரயில் திட்டத்தின் கீழ் இந்திய ரயில்வே 35 ஹெரிடேஜ் ரயில்களை உருவாக்கும். ஒவ் வொரு ரயிலும் ரூ.80 கோடி செலவில் தயாரிக்கப்படும். மேலும் மலைப் பகுதிகளில் ஹைட்ரஜன் ரயிலை இயக்குவதற்கான கட்டமைப்பை உருவாக்க ரூ.70 கோடி செலவிடப்படும்.

வடக்கு ரயில்வேயின் ஜிந்த் — சோனிபட் வழித் தடத்தில் இந்த ரயிலை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஹரியானாவின் ஜிந்த் நகரில் அமைக்கப்பட்டுள்ள 1 மெகாவாட் பாலிமர் எலக்ட்ரேலைட் மெம்பரேன் எலக்ட்ரோலைசர் ரயிலுக்கு தேவையான ஹைட்ர ஜனை வழங்கும். இந்த எரிபொருள் நிரப்பும் மையத்தில் 3,000 கிலோ ஹைட்ரஜனை சேமித்து வைக்க முடியும். இங்குள்ள ஹைட்ரஜன் கம்ப்ரஸர் மற்றும் டிஸ்பென் சர்கள் மூலம் ரயிலில் ஹைட்ரஜன் எரிபொருள் நிரப்பப்படும் என ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



# விமான சாகசத்தைக் காண மெரினா சென்ற 5 பேர் உயிரிழக்க என்ன காரணம்?

சென்னை மெரினா கடற்கரையில் விமான சாகச நிகழ்ச்சியைப் பார்க்கச் சென்று, உயிரிழந்த கார்த்திகேயனின் குடும்பம் நிலைகுலைந்து நிற்கிறது. இந்த நிகழ்வையொட்டி மொத்தம் ஐந்து பேர் உயிரிழந்திருக்கின்றனர். எங்கே பிரச்னை ஏற்பட்டது?

சென்னை மெரினா கடற்கரையில் நடந்த விமான சாகசத்தைப் பார்ப்பதற்காக திருவொற்றியூரில் இருந்து கணவருடனும் குழந்தையுடனும் வந்த சிவரஞ்சனி இப்போது நொறுங்கிப் போய் நிற்கிறார். விமான சாகச நிகழ்ச்சி முடிந்த பிறகு, கூட்டம் அதிகமாக இருந்ததால் மனைவியையும் குழந்தையையும் ஓரிடத்தில் நிற்கச் சொல்லி விட்டு, இருசக்கர வாகனத்தை எடுக்கச் சென்ற கணவர் கார்த்திகேயன் திரும்ப வரவேயில்லை.

திருவொற்றியூர் ஆர்.எம்.வி. நகர் பகுதியைச் சேர்ந்த 34 வயதான கார்த்திகேயன் ஒரு தனியார் நிறுவனத்தில் பணியாற்றிவந்தார். அவருக்கு சிவரஞ்சனி என்ற மனைவியும் வேதிக் கிருஷ்ணா என்ற இரண்டரை வயது மகனும் இருக்கின்றனர். விமான சாகசக் காட்சியைப் பார்ப்பதற்காக தங்களுடைய இரு சக்கர வாகனத்தில் கார்த்திகேயன், சிவரஞ்சனி, அவர்களுடைய குழந்தை ஆகிய மூவரும் மெரினாவுக்கு வந்தனர்.

விமான சாகசம் முடிந்ததும், எல்லோரும் ஒரே நேரத்தில் வெளியேறியதால் பல இடங்களிலும் நெரிசல் ஏற்பட்ட நிலையில், மனைவியை










சென்னை பல்கலைக்கழகத்திற்கு எதிரில் நிற்கச் சொல்லிவிட்டு, சற்று தூரத்தில் நிறுத்தப்பட்டிருந்த தனது இரு சக்கர வாகனத்தை எடுத்து வருவதற்காகச் சென்றிருக்கிறார் கார்த்திகேயன்.

**'ஒட்டுமொத்த குடும்பமும் நிலைகுலைந்து விட்டது'**

ஆனால், ஒன்றரை மணி நேரம் ஆகியும் அவரிடம் இருந்து தகவல் ஏதும் வரவில்லை. அந்தப் பகுதியில் லட்சக்கணக்கானவர்கள் குவிந்திருந்ததால், கார்த்திகேயனை சிவரஞ்சனியால் செல்போனிலும் தொடர்புகொள்ள முடியவில்லை. இரண்டரை மணிவாக்கில் கார்த்திகேயனின் செல்போனைத் தொடர்புகொள்ள முடிந்தாலும், அதனை யாரும் எடுக்கவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு, அதனை எடுத்துப் பேசிய ஒருவர், கார்த்திகேயன் தரையில் மயங்கி விழுந்திருப்பதாக சொன்னார்.

பதறியடித்து சிவரஞ்சனி அங்கே சென்ற போது, கார்த்திகேயன் ஒரு பிளாட்பாரத்தில் விழுந்து கிடந்தார். "நாங்கள் நின்ற இடத்திலிருந்து சிறிது தூரத்திலேயே அவர் கிடந்தார். அப்படியானால், சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக யாரும் அவரைக் கவனிக்கவில்லை. காவல்துறையையும் மற்றவர்களையும் நம்பித் தானே இந்த நிகழ்ச்சிக்கு வந்தோம்?" எனக் கேள்வியெழுப்புகிறார் சிவரஞ்சனி.

இதற்குப் பிறகு அவர் ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு சிகிச்சைக்கென சேர்க்கப்பட்டார். ஆனால், சிறிது நேரத்திலேயே அவர் உயிரிழந்ததாக அறிவிக்கப் பட்டது.

கார்த்திகேயனின் தந்தை கொரோனா கால கட்டத்தில்தான் மரணமடைந்திருந்த நிலையில், தாய் கீதாவும் கார்த்திகேயனை நம்பியே வாழ்ந்து வந்தார். "எங்கள் ஒட்டுமொத்தக் குடும்பமும் கார்த்தியை நம்பித்தான் வாழ்ந்துவந்தோம். இப்போது என்ன செய்வதென்றே தெரியவில்லை. இரண்டரை வயதுக் குழந்தைக்கு யார் பதில் சொல்வது?" என்கிறார் கீதா.

கார்த்திகேயனின் உடல் பிரேதப் பரிசோதனைக்குப் பிறகு, குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. அவருடைய மரணத்திற்கு என்ன காரணம் என்பது இதுவரை தெரிவிக்கப்படவில்லை. வெயிலின் தாக்கமா அல்லது நீரிழப்பா அல்லது வேறு காரணங்களா என்பது பிரேதப் பரிசோதனை அறிக்கையில் தெரியவரக்கூடும்.

**சென்னை மெரினா கடற்கரையில் என்ன நடந்தது?**

சென்னையில் ஞாயிற்றுக்கிழமையன்று நடந்த விமான சாகச நிகழ்ச்சியைப் பார்க்கச் சென்று உயிரிழந்த ஐந்து பேரில் கார்த்திகேயனும் ஒருவர். ஸ்ரீநிவாஸன், ஜான் பாபு, தினேஷ் உள்ளிட்ட மேலும் நான்கு பேரும் இதேபோல மயங்கி விழுந்து உயிரிழந்திருக்கின்றனர்.

விமானக் காட்சி முடிந்த பிறகு, கடற்கரையில் கூடியிருந்த அனைவரும் ஒரே நேரத்தில் அங்கிருந்து வெளியேற முயன்றபோது, கடற்கரையை ஒட்டியுள்ள அனைத்து சாலைகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. ஞாயிற்றுக் கிழமையன்று வெயிலின் தாக்கமும் வழக்கத்தை விட அதிகமாகவே அதாவது, 34.3 முதல் 35 டிகிரி அளவுக்கு இருந்தது. இது இயல்பான அளவை விட 0.8 முதல் 1.5 டிகிரி அளவுக்கு அதிகம் என சென்னை வானிலை ஆய்வுமையத்தின் வெப்பநிலை அறிக்கை குறிப்பிடுகிறது.

நெரிசல், வெயில், குடிக்க குடிநீர் கிடைப்பதில் ஏற்பட்ட சிரமம் ஆகியவற்றால் விமானக் காட்சியைப் பார்க்க வந்தவர்களில் ஆயிரக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டனர். இருநூற்றுக்கும் மேற்பட்டோர் மயங்கிவிழுந்தனர். இவர்களில் 90—க்கும் மேற்பட்டோர் ராஜீவ் காந்தி அரசு தலைமை மருத்துவமனை, ராயப்பேட்டை அரசு மருத்துவமனை, ஓமந்தூரார் அரசு மருத்துவமனை ஆகியவற்றில் சிகிச்சைபெற்று வீடு திரும்பினர்.

விமான சாகச நிகழ்ச்சியை ஒட்டி மெரினா கடற்கரை, அதனை ஒட்டிய சாலைகள், ரயில் நிலையங்களில் ஏற்பட்ட நெரிசல் குறித்து நேற்று விளக்கமளித்த மருத்துவத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்திய விமானப் படை கேட்டுக்கொண்ட எல்லா ஏற்பாடுகளையும் செய்து தந்ததாக குறிப்பிட்டார். ஆனால், மரணங்கள் குறித்து ஏதும் குறிப்பிடவில்லை.

ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே. பழனிச்சாமி துவங்கி பல்வேறு அரசியல் கட்சியினரும் உயிரிழப்புகள் குறித்து அறிக்கைகளை வெளியிட ஆரம்பித்த நிலையில், திங்கட்கிழமையன்று செய்தியாளர்களைச் சந்தித்த மா. சுப்பிரமணியன், மரணங்களை உறுதிசெய்தார்.

**போதிய ஏற்பாடுகள் இல்லையா?**

சென்னை மெரினா கடற்கரையில் விமானக் காட்சிக்கு லட்சக்கணக்கானவர்கள் வந்து குவிந்த நிலையில், ஆங்காங்கே தண்ணீர் தொட்டிகள் வைக்கப்பட்டிருந்தாலும் அது போதுமானதாக இல்லை. வைக்கப்பட்டிருந்த பல தொட்டிகளில் ஒரே ஒரு குழாய் மட்டுமே பொருத்தப்பட்டிருந்ததால், அதில் நீரைப் பிடிக்க பார்வையாளர்கள் நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டியிருந்தது. மெரினா கடற்கரையில் கடை வைத்திருந்தவர்கள் கூட்டத்தை எதிர்பார்த்திருந்தனர் என்றாலும் இவ்வளவு பெரிய கூட்டத்தை எதிர் பார்க்கவில்லையென்பதால், அவர்களிடம் இருந்த தண்ணீர், குளிர் பானங்கள் போன்றவையும் ஒன்றிரண்டு மணி நேரத்தில் விற்றுத் தீர்ந்தன. இதனால், பலர் குடிநீருக்காக அலை பாய்ந்தனர்.

"எங்களுக்கு ஒரு அடையாள அட்டை கொடுத்து, வெளியில் போக, வர அனுமதித்திருந்தால் தண்ணீர் தீரத்தீர எடுத்துவந்திருப்போம்," என அந்தப் பகுதியில் கடை வைத்திருப்பவர்கள் தெரிவித்தனர்.

விமான சாகசத்தை ஒட்டி லட்சக் கணக்கானோர் கடற்கரையில் குவிவார்கள் என எதிர்பார்க்கப்பட்டிருந்தும்கூட, சிந்தாதிரிப் பேட்டை முதல் வேளச்சேரி வரையிலான வழித்தடத்தில் இயங்கிய பறக்கும் ரயில் சேவை, இந்தக் கூட்டத்தை சமாளிக்கும் வகையில் இயக்கப்படாதது பொதுமக்களுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்தியது.

மெரினா கடற்கரையை ஒட்டியுள்ள காமராஜர் சாலை, அண்ணா சாலை, வாலஜா சாலை, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை உள்ளிட்ட சாலைகளில் விமான சாகசம் முடிந்து பல மணி நேரத்திற்கு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இந்தப் போக்குவரத்து நெரிசலில் பல ஆம்புலன்சுகளும் சிக்கிக்கொண்டன.

ஒரே நேரத்தில் இத்தனை லட்சம் பேர் ஒரு விமான சாகச நிகழ்ச்சியை கண்டு ரசித்தது சாதனையாக முன்னிறுத்தப்பட்டாலும், இந்த நிகழ்வு தொடர்பாக ஏற்பட்ட உயிரிழப்புகள் கடும் விமர்சனத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

# தனியார் வங்கிகள், நிதி நிறுவனங்களின் பெயரில் கடன் மோசடி-போலீஸ் எச்சரிக்கை!

பிரபல தனியார் வங்கிகள், நிதி நிறுவனங்களின் பெயரைச் சொல்லி குறைந்த வட்டிக்கு கடன் வாங்கி தருவதாகக் கூறி, புதுச்சேரியைச் சார்ந்த 132 நபர்களிடம் கடந்த ஐந்து மாதத்தில் ரூ.1 கோடியே 82 லட்சம் மோசடி நடந்துள்ளது.

புதுச்சேரியில் இணைய வழி குற்றங்கள், மோசடிகள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது. அந்த வகையில் இணைய திருடர்கள் பொதுமக்களை நவீன முறையில் ஏமாற்றுவதாக புதுச்சேரி சைபர் க்ரைம் போலீஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர்கள் கூறியதாவது; புதுச்சேரியில் உள்ள பிரபல வங்கிகள், நிதி நிறுவனங்களின் மேலாளர் பேசுவதாகச் சொல்லி குறைந்த வட்டியில் உங்களுக்கு கடன் வாங்கி தருகிறோம் என்று நம்பவைத்து கடந்த ஆறு மாதங்களாக பலரிடம் மர்மநபர்கள் மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக, ஜாமீன்தாரர்கள் யாரும் தேவையில்லை, உங்களுடைய வங்கி பரிவர்த்தனையை வைத்து உங்களுக்கு கடன் கொடுப்போம். எனச் சொல்லி, இன்சூரன்ஸ் ப்ராசசிங் ஃபீஸ் என ஒவ்வொரு நபரிடமும் அவர்களுடைய




அவசரத்தைப் புரிந்து கொண்டு ரூ.2 ஆயிரம் முதல் ரூ.16 லட்சம் வரை மோசடி செய்துள்ளனர்.

இப்படி புதுச்சேரியைச் சேர்ந்த 132 நபர்களிடம் கடந்த ஐந்து மாதங்களில் மட்டும் ரூ. 1.82 கோடி இணைய வழி மோசடிக்காரர்களால் திருடப்பட்டுள்ளது. குறைந்த வட்டிக்கு பணம், ஜாமீன் தேவை இல்லை என்று சொல்லி பிரபல வங்கிகள், நிதி நிறுவனங்களின் பெயர்களைச் சொல்லி நடக்கும் மோசடிகள் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் இந்தக் கும்பலிடம் சிக்காமல் விழிப்புடன் இருக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.




**8.10.2024 அன்று சென்னை எம்.ஆர்.சி. நகர், நகராட்சி நிருவாக அலுவலகக் கூட்டரங்கில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள், தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் சொற்குவை வலைத்தளமான sorkuvai.tn.gov.in—ஐ தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், கார்க்கி ஆராய்ச்சி நிறுவனர் முனைவர் மதன் கார்க்கி, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.**

**மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்!**

# காஷ்மீர் மற்றும் ஹரியாணா தேர்தல் முடிவுகள் உணர்த்துவது என்ன?

ஹரியாணா, ஜம்மு — காஷ்மீரில் சட்ட மன்றத் தேர்தல் நடந்து முடிந்துள்ளது. ஹரியாணாவில் தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சியைத் தக்க வைத்திருக்கிறது பா.ஜ.க. ஜம்மு — காஷ்மீரில் தேசிய மாநாட்டுக் கட்சி — காங்கிரஸ் கூட்டணி ஆட்சியைப் பிடித்திருக்கிறது. இந்தத் தேர்தல் முடிவுகள் முக்கியமான பாடத்தைச் சொல்லியிருக்கின்றன என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள். அது என்ன?





### ஹரியாணா, ஜம்மு – காஷ்மீர் தேர்தல் முடிவுகள்

ஹரியாணா மாநிலத்திலும் ஜம்மு — காஷ்மீர் யூனியன் பிரதேசத்திலும் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலின் முடிவுகள் அக்டோபர் 8 அன்று வெளியாகின. ஹரியாணாவில் மொத்தமுள்ள 90 இடங்களில், 48 இடங்களில் பாரதிய ஜனதா கட்சியும் 37 இடங்களில் காங்கிரஸ் கட்சியும் இந்திய தேசிய லோக் தளம் இரண்டு இடங்களிலும் சுயேச்சைகள் மூன்று இடங்களிலும் வெற்றிபெற்றுள்ளன.

ஜம்மு—காஷ்மீரைப் பொருத்தவரை மொத்தமுள்ள 90 இடங்களில் ஜம்மு — காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சி 42 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. காங்கிரஸ் கட்சி 6 இடங்களிலும் பா.ஜ.க. 29 இடங்களிலும் மக்கள் ஜனநாயகக் கட்சி 3 இடங்களிலும் ஜம்மு — காஷ்மீர் மக்கள் மாநாட்டுக் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஆம் ஆத்மி ஆகியவை தலா ஒரு இடத்திலும், சுயேச்சைகள் ஏழு இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு நடக்கும் முதல் சட்டமன்றத் தேர்தல்கள் இவை. நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவால் அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியாமல் போன நிலையில், ஹரியாணாவில் அக்கட்சிக்குக் கிடைத்திருக்கும் வெற்றி மிக முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. அக்கட்சி தொடர்ந்து சரிவை சந்திக்கக் கூடும் என்ற கூற்றை இந்த வெற்றி பொய்யாக்கியிருக்கிறது.

### ஜம்மு– காஷ்மீர் மக்களின் மனநிலையை எதிரொலித்த தேர்தல்

இந்தியாவில் ஜம்மு — காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்தை அளித்துவந்த அரசியலமைப்புச் சட்டத்தின் 370வது பிரிவு நீக்கப்பட்டு, மாநிலம் இரண்டு யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்ட பிறகு, அங்கு நடந்த முதல் தேர்தல் இது என்பதால், இந்த நடவடிக்கைகள் குறித்த மக்களின் மனநிலையை அறியத் தரும் தேர்தலாக இந்த சட்டமன்றத் தேர்தல் பார்க்கப்பட்டது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவரான ஓமர் அப்துல்லா அதிர்ச்சி தரத்தக்க வகையில் தோல்வியடைந்த நிலையில், சட்டமன்றத் தேர்தலில் அக்கட்சி வெற்றிபெற்றிருக்கிறது. ஓமர் அப்துல்லா மாநிலத்தின் புதிய முதல்வராகத் தேர்வுசெய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், இந்தத் தேர்தல் முடிவுகள் காங்கிரசிற்கு ஏமாற்றம் தரக்கூடிய வகையிலேயே அமைந்திருக்கிறது. ஹரியாணாவில் அக்கட்சி வெல்லக்கூடும் என பலரும் எதிர்பார்த்த நிலையில், கடந்த முறையைவிட கூடுதல் இடங்களுடன் மீண்டும் பா.ஜ.கவே ஆட்சியைப் பிடித்திருக்கிறது. ஜம்மு — காஷ்மீரிலும் 38 இடங்களில் போட்டியிட்டு வெறும் 6 இடங்களையே காங்கிரஸ் கைப்பற்றியிருக்கிறது.

### காங்கிரஸ்– ஆம் ஆத்மி கூட்டணி அமையாததால் தவறிய வாய்ப்பு

ஹரியாணாவில் காங்கிரஸ் கட்சிக்கும் ஆம் ஆத்மிக்கும் இடையில் சரியான கூட்டணி ஏற்பட்டிருந்தால், எளிதாக ஆட்சியைக் கைப்பற்றியிருக்க முடியும் என்ற நிலையில், அந்த வாய்ப்பு தவறவிடப்பட்டதாக குறிப்பிடுகிறார் மூத்த பத்திரிகையாளரான ஏ.எஸ். பன்னீர்செல்வன்.

"ஹரியாணாவில் தொகுதி தொகுதியாக பார்த்தால், ஆம் ஆத்மி கட்சி பல இடங்களில் காங்கிரசின் வாக்குகளைப் பிரித்திருப்பது தெரியும். ஆகவே, இது காங்கிரசின் தோல்வி மட்டுமல்ல, மற்ற கட்சிகளின் தோல்வியும்கூட. ஹரியாணாவில் கூட்டணி ஏற்படுவதில் யார் தவறு செய்தார்கள் என இங்கிருந்து கூற முடியாது" என்கிறார் அவர்.

ஹரியாணாவில் சட்டமன்றத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட நிலையில் காங்கிரசும் ஆம் ஆத்மி கட்சியும் கூட்டணி தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தின. ஆம் ஆத்மி கட்சி 10 — 12 இடங்களைக் கோரிய நிலையில், காங்கிரஸ் சுமார் 6 இடங்கள் வரை அளிக்க முன்வந்தது.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்த நிலையில், எந்தெந்த இடங்களில் ஆம் ஆத்மி கட்சி போட்டியிடுவது என்பதை முடிவு செய்வதில் சிக்கல் ஏற்பட்டது. முடிவில், இரு கட்சிகளும் தனித்தே போட்டியிட முடிவு செய்தன. இந்த விவகாரத்தில் காங்கிரசை மட்டும் குறை சொல்ல முடியாது என்கிறார் பன்னீர் செல்வன்.

"தமிழ்நாட்டில் தி.மு.க. சொல்வதை காங்கிரஸ் கேட்கிறது என்றால், இன்னொரு மாநிலத்திலும் பிராந்தியக் கட்சி சொல்வதை காங்கிரஸ் கேட்க வேண்டுமென சொல்ல முடியாது. அந்தந்த மாநிலத்தின் கட்சி நிலவரங்களோடு சம்பந்தப்பட்ட விஷயம் அது. பெரிய கட்சிக்கு மட்டும்தான் கூட்டணியைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இருக்கிறது என்றும் சொல்ல முடியாது. ஆம் ஆத்மிக்கும் இதில் பொறுப்பு இருக்கிறது" என்கிறார் அவர்.

### 'கூட்டணியின் வலிமையை எதிர்க்கட்சிகள் உணர வேண்டும்'

இந்தத் தேர்தல் முடிவுகளை கூர்ந்து கவனிக்கும்போது, தமிழ்நாடும் உத்தரப்பிரதேசமும் அளித்த பாடத்தை இந்தியாவின் மற்ற மாநிலங்களில் உள்ள பா.ஜ.கவுக்கு எதிரான கட்சிகள் கற்றுக்கொள்ளவில்லை என்பது புரிகிறது என்கிறார் பன்னீர்செல்வன்.

"எவ்வளவு சிக்கல்கள் இருந்தாலும் கூட்டணியை தொடர்ந்து தக்க வைக்கவேண்டும். தமிழ்நாட்டில் மக்கள் நலக் கூட்டணி என்ற பரிசோதனை முயற்சி தோற்ற பிறகு, அதில் இடம்பெற்றிருந்த கட்சிகளில் பல தி.மு.க. கூட்டணியில் இணைந்து, எவ்வித பிரச்னையும் இல்லாமல் பார்த்துக் கொண்டுதான் இத்தனை தேர்தல்களைச் சந்தித்திருக்கிறார்கள். இதேதான் உத்தரப்பிரதேசத்திலும் நடந்தது."

"தேர்தல்களில் கூட்டணிக் கணக்கு என்பது மிக மிக முக்கியம். ஆனால், இந்த நிதர்சனம் இந்தி பேசும் மாநிலங்களில் இன்னும் எடுபட ஆரம்பிக்கவில்லை. இன்று ஹரியாணாவில் நடந்ததுதான் சில மாதங்களுக்கு முன்பாக மத்தியப் பிரதேசத்தில் நடந்தது. கூட்டணி வலிமையை உணராதவரை, எதிர்க்கட்சிகள் பா.ஜ.கவை வீழ்த்துவது எளிது எனத் தோன்றவில்லை" என்கிறார் பன்னீர்செல்வன்.

2016ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தே.மு.தி.க., இடதுசாரிகள், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, ம.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் இணைந்து மக்கள் நலக் கூட்டணி என்ற பெயரில் ஒரு கூட்டணியை அமைத்தன. அந்தக் கூட்டணி, ஓரிடத்தில் கூட வெற்றிபெறவில்லை. ஆளும் அ.தி.மு.கவே திரும்பவும் வெற்றிபெற்றது. தமிழ்நாட்டில் 1984க்குப் பிறகு, ஆட்சியில் இருந்த கட்சியே மீண்டும் ஆட்சிக்கு வந்தது அதுதான் முதல் முறை.

"அந்தத் தருணத்தில், அ.தி.மு.க. ஆட்சிக்கு எதிரான வாக்குகளாக மக்கள் நலக் கூட்டணியும் தி.மு.கவும் பெற்ற மொத்த வாக்குகள், அ.தி.மு.க. பெற்ற வாக்குகளைவிட 13 சதவீதம் அதிகமாக இருந்தது. ஆனால், பிரிந்து நின்றதால் தி.மு.க. தோற்றுவிட்டது. அடுத்த தேர்தலில் எத்தனை இடங்களில் போட்டியிடுகிறோம் என்பதைவிட வெற்றி முக்கியம் என்பது கட்சிகளுக்கு புரிந்தது. இந்த புரிதல் அகில இந்திய அளவில் பரவ வேண்டும். உ.பியில் அகிலேஷ் பெற்ற வெற்றியும் இங்கே ஸ்டாலின் பெற்றுவரும் வெற்றிகளும் கூட்டணிக் கணக்குகளால் கிடைத்தவை. இதை மற்ற கட்சிகள் புரிந்துகொள்ள வேண்டும்" என்கிறார் பன்னீர்செல்வன்.

### பாஜவுக்கு எதிரான ஜம்மு – காஷ்மீர் தேர்தல் முடிவுகள் உணர்த்துவது என்ன?

ஹரியாணாவில் கிடைத்த தோல்வியால், காங்கிரஸ் துவண்டு போயிருந்தாலும் ஜம்மு — காஷ்மீரில் தேசிய மாநாடு — காங்கிரஸ் கூட்டணிக்குக் கிடைத்திருக்கும் வெற்றி குறிப்பிடத்தக்க ஒன்று என்கிறார் அவர்.

"ஜம்மு — காஷ்மீர் தேர்தல் முடிவுகளை மிக முக்கியமான எதிர்வினையாக பார்க்க வேண்டும். அந்த மாநிலத்தில் ஐந்து நியமன எம்.எல். ஏக்கள் இருப்பார்கள் என அறிவித்துவிட்டதால், வாக்கு எண்ணிக்கை துவங்கும் முன்பே அவர்களிடம் ஐந்து எம்.எல்.ஏக்கள் இருந்தார்கள். மேலும், தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் இந்துக்கள் அதிகமுள்ள ஜம்முவில் அதிக இடங்களும் முஸ்லிம்கள் அதிகமுள்ள பள்ளத்தாக்கு பகுதியில் தொகுதிகள் குறைவாகவும் இருக்கும்படி பார்த்துக்கொண்டார்கள். அப்படியிருந்தும் முடிவுகள் தீர்க்கமாக பா.ஜ.கவுக்கு எதிராக வந்திருக்கின்றன. 370ஐ நீக்குவதன் மூலமாக காஷ்மீரிகள் என்ற உணர்வை அம்மாநில மக்களிடம் நீக்க முடியவில்லை." என்கிறார் ஏ.எஸ். பன்னீர் செல்வன்.

தொடர்ந்து பேசிய அவர், "ஆகவே இன்னும் நீண்ட நாட்களுக்கு ஜம்மு — காஷ்மீரை யூனியன் பிரதேசமாக வைத்திருக்க முடியாது. விரைவிலேயே அதன் மாநில அந்தஸ்தை திரும்பத் தர வேண்டியிருக்கும். 370வது பிரிவை திரும்ப கொண்டுவர மாட்டார்கள் என்றாலும் சில அம்சங்களாவது திருப்பியளிக்கப்படும். ஜம்மு — காஷ்மீரில் நாங்கள் எடுத்த முடிவை மக்கள் ஆதரிப்பார்கள் என்று சொன்னார்கள். ஆனால், மக்கள் அதற்கு நேரெதிராக, தீர்க்கமாக வாக்களித்திருக்கிறார்கள்" என்றார்.

2014ல் இருந்து பா.ஜ.கவுடன் கூட்டணி அமைத்து அம்மாநிலத்தில் ஆட்சியில் இருந்த ஜம்மு — காஷ்மீர் மக்கள் ஜனநாயகக் கட்சி (பி.டி.பி.) இந்தத் தேர்தலில் படுதோல்வியைச் சந்தித்திருக்கிறது. 81 இடங்களில் போட்டியிட்டு, சுமார் 9 சதவீத வாக்குகளையும் மூன்று இடங்களையும் மட்டுமே அக்கட்சி பிடித்திருக்கிறது.

"பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்த எல்லோருமே அதன் ஆகிருதியை இழந்தார்கள். ஒய்.எஸ்.ஆர். காங்கிரசானாலும் சரி, சிவசேனாவாக இருக்கட்டும், அ.இ.அ.தி.மு.கவாக இருக்கட்டும் — எல்லோருமே பெரும் சிக்கலைச் சந்தித்தார்கள். ஆகவே, தற்போது பி.டி.பிக்குக் கிடைத்த தோல்வி என்பது அந்தக் கட்சிக்குக் கிடைத்த தோல்வி மட்டுமல்ல. இறுதியாக அங்கே ஆட்சியில் இருந்த பா.ஜ.க. — பி.டி.பி. கூட்டணிக்குக் கிடைத்த தோல்வியாகத்தான் பார்க்க வேண்டும்." என்கிறார் ஏ.எஸ். பன்னீர்செல்வன்.

### மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட் தேர்தல்களில் தாக்கம் இருக்குமா?

இந்தத் தேர்தல் முடிவுகள் அடுத்தடுத்து வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தல்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். விரைவிலேயே மகாராஷ்டிர மாநிலத்திலும் ஜார்க்கண்டிலும் தேர்தல்கள் நடக்கவிருக்கின்றன. மகாராஷ்டிராவில், காங்கிரஸ் — தேசியவாதக காங்கிரஸ் — உத்தவ் தாக்கரேவின் சிவசேனா கூட்டணியில் தானே பலம் வாய்ந்த கட்சி என்ற காங்கிரஸின் இமேஜ், இந்தத் தோல்வியால் சற்று மங்கக்கூடும். இது இடங்களைப் பகிர்ந்து கொள்வதிலும் எதிரொலிக்கக்கூடும்.

"ஆனால், மகாராஷ்டிராவில் தேர்தலை நடத்தாமல் தேர்தல் ஆணையம் தள்ளிப்போடுவதே, காங்கிரஸ் கூட்டணிக்கு இருக்கும் வாய்ப்பை உறுதிப்படுத்துகிறது" என்கிறார் பன்னீர்செல்வன்.

இந்தத் தேர்தல் முடிவுகளில் இன்னொரு விஷயமும் கவனிக்கத்தக்கதாக இருந்தது. ஹரியாணா, ஜம்மு — காஷ்மீரில் மேற்கொள்ளப்பட்ட தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள், ஹரியானாவில் காங்கிரஸ் கட்சி ஆட்சியைப் பிடிக்கும் என்றும் ஜம்மு — காஷ்மீரில் தொங்கு சட்டமன்றம் இருக்கும் என்றும் கூறின. ஆனால், ஹரியானாவில் பா.ஜ.க. ஆட்சியைப் பிடித்திருப்பதோடு, ஜம்மு — காஷ்மீரில் தேசிய மாநாடு — காங்கிரஸ் கூட்டணி தெளிவான வெற்றியோடு ஆட்சியைக் கைப்பற்றியிருக்கிறது.

"2017க்குப் பிறகு தேர்தலுக்குப் பிந்தைய எல்லாக் கருத்துக் கணிப்புகளுமே தவறாகத்தான் முடிந்தன. அதனுடைய நீட்சியாகத்தான் இதைப் பார்க்க வேண்டியிருக்கிறது. தேர்தலுக்குப் பிந்தையக் கருத்துக் கணிப்புகளை ஒரு சோம்பேறித்தனமான இதழியலாகத்தான் பார்க்க வேண்டியிருக்கிறது. அதில் எவ்வித கடின உழைப்பும் செலுத்தப்படுவதில்லை என்பதைத்தான் இந்தத் தேர்தல் முடிவுகள் காட்டியிருக்கின்றன" என்கிறார் ஏ.எஸ். பன்னீர்செல்வன்.

# 100 நாள் வேலை திட்டத்தை அதிகாரிகள் கண்காணிப்பது இல்லை-உயர்நீதிமன்ற மதுரை கிளை கடும் அதிருப்தி!



தமிழகத்தில் 100 நாள் வேலை உறுதித் திட்டத்தில் மேல்நிலை அதிகாரிகள் முதல் கீழ்நிலை அதிகாரிகள் வரை யாரும் பணி களை முறையாகக் கண்காணிப்பதில்லை என்று உயர் நீதிமன்றம் அதிருப்தி தெரி வித்துள்ளது. கரூர் மாவட்டம் அரவக்குறிச் சியைச் சேர்ந்த கோபிநாத், உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில் கூறி யிருப்பதாவது:

அரவக்குறிச்சி குறிகாரன் வலசை, கீழ் பாகம் கிராமம் மற்றும் சுற்றியுள்ள கிராம ஊராட்சிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெறுகின்றன. கிராமத் தில் இல்லாதவர்கள், வட மாநிலத்தவர், இறந்தவர்கள் மற்றும் வெளியூரில் வசிப்ப வர்கள் பணி புரிந்ததாக கணக்குகாட்டி ஊதியம் பெற்று, மோசடி செய்யப்பட் டுள்ளது. இவ்வாறு ரூ.5 கோடிக்கு மேல் மோசடி நடைபெற்றுள்ளது.

மத்திய அரசின் ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் நடை பெற்று வருகின்றன. ஒரு குழாய் இணைப்பு பணிக்கு மாவட்ட ஆட்சியர் ரூ.1,200 கட்ட ணம் நிர்ணயம் செய்துள்ளார். ஆனால், இங்கு ரூ.5 ஆயிரம் வரை வசூலிக்கப் படுகிறது. குறிப்பாக, பட்டியலின மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் இதுபோன்ற முறைகேடுகள் நடைபெற்று வருகின்றன. இது தொடர்பான விசாரணைக்கு உத்தர விட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப் பட்டிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணி யன், எல்.விக்டோரியா கௌரி அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி கள், "மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தை மேல் நிலை அதிகாரிகள் முதல் கீழ்நிலை அலுவ லர்கள் வரை முறையாக கண்காணிப்பது இல்லை.

இதுபோன்ற திட்டங்களில் ஊழல் செய்வதை நோக்கமாக வைத்துள்ளனர். மனு தொடர்பாக மத்திய ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, தமிழக ஊரக வளர்ச்சித் துறை செயலாளர், கரூர் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் பதில் அளிக்க வேண்டும்" என்று உத்தரவிட்டு, விசாரணையை 2 வாரங்களுக்கு தள்ளி வைத்தனர்.

# சென்னை மெரினா கடற்கரையில் ரூ.1.37 கோடியில் புதுப்பிக்கப்பட்ட நீச்சல் குளம்-துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை மெரினா கடற்கரையில் புதுப்பிக்கப்பட்ட மெரினா நீச்சல் குளத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு— 114க்கு உட்பட்ட மெரினா கடற்கரையில் ரூ.1.37 கோடி மதிப்பில் புதுப்பிக்கப்பட்ட மெரினா நீச்சல் குளத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

தொடர்ந்து, துணை முதலமைச்சர், மெரினா நீச்சல் குளத்தில் குளிப்பதற்கு நேரம் நிர்ணயம் செய்தல் மற்றும் கட்டணம் செலுத்துவதற்கான க்யூ.ஆர். கோடு கட்டண சேவையைத் தொடங்கி வைத்து, நீச்சல் குளத்தினை சுற்றி பார்வையிட்டார்.

மெரினா நீச்சல் குளமானது, 1942 ம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் உலகப் போரின் போது உருவாக்கப்பட்டது. 1947 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னை மாநகராட்சியிடம் இந்த நீச்சல் குளம் ஒப்படைக்கப்பட்டது. 1947 ம் ஆண்டு முதல் தொடர்ந்து 77 ஆண்டுகளாக சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில் தனியார் பராமரிப்பில் விடப்பட்ட இந்த நீச்சல் குளம் தற்போது ரூ.1 கோடியே 37 லட்சம் மதிப்பில் புதுப்பிக்கப்பட்டு, சென்னை மாநகராட்சியால் நேரடியாக பராமரித்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இந்த புதுப்பிக்கப்பட்ட நீச்சல் குளத்தின் நடைபாதையை சீரமைத்து வர்ணம் பூசுதல், நடைபாதையில் புதிய கற்கள் மற்றும் ஓடுகள் பதித்தல் உள்ளிட்ட பராமரிப்புப் பணிகள், பார்வையாளர்கள் அமரும் இடத்தில் மேற்கூரை அமைத்தல், குளத்தைச் சுற்றியுள்ள சுவரில் வண்ண ஓவியம் வரைந்து அழகுபடுத்துதல், ஒப்பனை அறை, குளியலறை, உடை மாற்றும் அறைகளை பழுதுபார்த்து மேம்படுத்துதல், போதிய மின்விளக்கு வசதிகள் உள்ளிட்ட பல்வேறு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது.





இந்த நீச்சல் குளம் 100 மீட்டர் நீளமும், 30 மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. குறைந்த அளவாக 3.5 அடியும், அதிக அளவாக 5 அடி உயரமும் உடையது. மேலும், இந்த நீச்சல் குளமானது காலை 5.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை செயல்படும். காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை பெண்களுக்கான நேரமாகும்.

இந்த நீச்சல் குளத்தில் குளிப்பதற்கு நேரம் நிர்ணயம் செய்தல் மற்றும் கட்டணம் செலுத்துவதற்காக கியூ.ஆர். கோடு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நீச்சல் குளத்தில் 1 மணி நேரத்திற்கு பெரியவர்களுக்கு ரூ.50 — எனவும், இதனை ஆன்லைனில் பதிவு செய்பவர்களுக்கு சிறப்புச் சலுகையாக ரூ.45 —ம், 12 வயது முதல் 14 வயது வரையுள்ள சிறுவர்களுக்கு ரூ.30 — எனவும், ஆன்லைனில் பதிவு செய்பவர்களுக்கு சிறப்புச் சலுகையாக ரூ.25 —எனவும் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த நீச்சல் குளமானது, பராமரிப்புப் பணி காரணமாக திங்கட்கிழமை அன்று வார விடுமுறை விடப்படுகிறது. இந்த நீச்சல் குளம் இன்று (9 ந் தேதி) முதல் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு செயல்படும்.

இந்த நீச்சல் குளத்தில் 10 உயிர் பாதுகாவலர்கள், 8 தூய்மைப் பணியாளர்கள், 10 சுத்தம் செய்யும் பணியாளர்கள், 2 கண்காணிப்பாளர்கள், 6 பாதுகாவலர்கள், 2 எலக்ட்ரீஷியன் மற்றும் பிளம்பர் என மொத்தம் 38 பணியாளர்கள் சுழற்சி முறையில் பணியாற்றிட நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, கோவி. செழியன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராம லிங்கம், நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், இணை ஆணையாளர் ஜெ.விஜயா ராணி, மத்திய வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மாமன்ற ஆளும்கட்சித் துணைத் தலைவர் தனசேகரன், மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை-அமைச்சர் செந்தில் பாலாஜி ஆலோசனை!

தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் மின்சாரத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள சென்னை மற்றும் காஞ்சிபுரம் மின் பகிர்மான மண்டலங்களில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் விரிவான ஆய்வினை மேற்கொண்டார். வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்வதற்காக சென்னை மற்றும் காஞ்சிபுரம் மின் மண்டலங்களில் 392 மின்மாற்றிகள், 4,444 மின் கம்பங்கள் மற்றும் 2,484 கி.மீ. மின்கடத்திகள் உட்பட அனைத்து தளவாட பொருட்களின் கையிருப்பு நிலை குறித்து அமைச்சர் கேட்டறிந்தார்.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட சென்னை மற்றும் காஞ்சிபுரம் மண்டல தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள் மற்றும் சென்னை மண்டல 15 பொறுப்பு அலுவலர்கள் அனைவருக்கும் கீழ்கண்ட அறிவுறுத்தல்களை அமைச்சர் வழங்கினார்.

**தரை மட்டத்துக்கு மேல் பில்லர் பாக்ஸ்**

சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் மழைநீர் தேங்கும் பகுதிகளில், அடையாளம் காணப்பட்ட அனைத்து தாழ்வு நிலையிலான பில்லர் பாக்ஸ்கள் தரை மட்டத்திற்கு மேல் ஒரு மீட்டர் உயரத்தில் நிறுவும் பணிகள் உடனடியாக முடிக்கப்பட வேண்டும். இதற்குரிய அனைத்து நடவடிக்களையும் சென்னை மற்றும் காஞ்சிபுர மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வை பொறியாளர்கள் மேற்கொண்டு பணிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிவதை உறுதி செய்ய வேண்டும்.

பில்லர் பாக்ஸ்கள் அனைத்தும் உரிய முறையில் பராமரிக்கப்படுவதை அந்தப் பகுதியை சார்ந்த செயற்பொறியாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் கள ஆய்வு மேற்கொண்டு உறுதி செய்ய வேண்டும். மரம் வெட்டும் உபகரணங்கள், பாதுகாப்பு உபகரணங்கள் அனைத்தும் இயங்கும் நிலையில் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும் மற்றும் தேவைப்படும் அனைத்து தளவாடப் பொருட்களையும் இருப்பில் வைத்துக் கொள்வதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஜே.சி.பி., கிரேன்கள் உள்ளிட்ட வாகன உரிமையாளர்களின் தொலைபேசி எண்களை முன்னமே கேட்டறிந்து அவைகளின் தயார்நிலை உறுதி செய்யப்பட வேண்டும்.

மின் தடங்கல் ஏற்படின் முதற்கட்டமாக மருத்துவமனைகள், குடிநீர் இணைப்புகள், அரசாங்க அலுவலகங்கள், வங்கிகள் மற்றும் செல்போன் டவர்கள் அனைத்திற்கும் முன்னுரிமை அடிப்படையில் மின்சாரம் வழங்கப்பட வேண்டும்.

**தயார் நிலையில் வாகனங்கள்**

வாரிய வாகனங்கள் அனைத்தும் செப்பனிடப்பட்டு எரிபொருள் நிரப்பப்பட்டு தயார் நிலையில் இருக்க வேண்டும். காற்றுடன் கூடிய மழையின் போது மிகத் தாழ்வான நிலையில் செல்லும் மேல்நிலை மின் கம்பிகள் அறுந்து விழுவதை தடுக்க உரிய நடவடிக்கையினை போர்க்கால அடிப்படையில் எடுக்கப்பட வேண்டும்.





இதுபோன்ற மழைக் காலங்களில் உயர் அலுவலர்கள் அனைவரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தினருடனும், தீயணைப்பு துறையினருடனும் எப்பொழுதும் தொடர்பில் இருக்க வேண்டும்.

பேரிடர் காலங்களில் பணிகளில் ஈடுபடும் பணியாளர்கள் தங்குவதற்கு உரிய பள்ளிகள், திருமண மண்டபங்கள், சமுதாயக் கூடங்கள் அடையாளம் காணப்பட்டு தயார் நிலையில் இருக்க வேண்டும்.

அனைத்து அலுவலர்களும் தமது அலைபேசியை எந்தக் காரணம் கொண்டும் ஆப் செய்து வைக்கக்கூடாது எனவும், இதனை மீறுபவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் எச்சரித்தார்.

மேலும், மழைக்காலங்களில் தகவல் தொடர்பில் தொய்வு ஏற்படாமல், மின்சார பணிகள் தொடர்பான தகவல்களை பரிமாறிக் கொள்ள வாக்கி டாக்கி இயந்திரங்களை உடனடியாக கொள்முதல் செய்ய உத்தரவிட்டார்.

**மின் தடங்கல் காரணம் கண்டுபிடியுங்கள்**

கடந்த 1.4.2024 முதல் 30.9.2024 வரை சென்னை மற்றும் காஞ்சிபுரம் மண்டலங்களில் ஏற்பட்ட மின்தடங்கல் பற்றியும் விரிவான ஆய்வினை மேற்கொண்டு, தொடர்ச்சியாக மின்தடங்கல் ஏற்படும் இடங்களில் சிறப்பு கவனம் செலுத்தி அதற்கான காரணத்தை கண்டறிந்து உடனுக்குடன் சரி செய்யுமாறும், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும், தடையில்லா, சீரான மின்சாரம் தொடர்ந்து கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் அமைச்சர் அறிவுறுத்தினார்.

மின் சேவைகள் மற்றும் தடை குறித்த புகார்களுக்கு 24 மணி நேரமும் செயல்படும் மின்னகத்தை 94987 94987 தொடர்பு கொள்ளுமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் க.நந்தகுமார், பசுமை எரிசக்தி கழக மேலாண்மை இயக்குநர் அனீஷ் சேகர், இணை மேலாண்மை இயக்குநர் விஷ்ணு மஹாஜன், இயக்குநர் கு.இந்திராணி, சென்னை மற்றும் காஞ்சிபுரம் மண்டல தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள் மற்றும் சென்னை மண்டல 15 பொறுப்பு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



**தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 9.10.2024 அன்று முகாம் அலுவலகத்தில் திரைப்பட நடிகர் ஜெயராம் தனது குடும்பத்தினருடன் நேரில் சந்தித்து தனது மகன் காளிதாஸ் ஜெயராம் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.**

# மணிரத்னம், ஏ.ஆர்.ரஹ்மானுக்கு தேசிய விருது-ஜனாதிபதி திரவுபதி முர்மு வழங்கினார்!





டெல்லியில் நடைபெற்ற 70வது தேசிய திரைப்பட விழாவில் இயக்குனர் மணிரத்னம், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான், நடிகை நித்யா மேனன் உள்ளிட்டோருக்கு தேசிய விருதுகளை ஜனாதிபதி திரவுபதி முர்மு வழங்கினார். வாழ்நாள் சாதனைக்கான 'தாதா சாகேப் பால்கே' விருதை நடிகர் மிதுன் சக்ரவர்த்தி பெற்றார்.

திரைத்துறை கலைஞர்களுக்கு இந்திய அளவிலான உயரிய கவுரவம், மத்திய அரசின் தேசிய விருதுகள் ஆகும். 1954—ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட இந்த விருதுகளை கடந்த 2021—ம் ஆண்டு முதல் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழகம் நிர்வகித்து வருகிறது. இந்த விருதுகளுடன் வாழ்நாள் சாதனைக்கான 'தாதா சாகேப் பால்கே' விருது 1969—ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதன்படி 2022—ம் ஆண்டுக்கான தேசிய திரைப்பட விருதுகள் கடந்த ஆகஸ்டு மாதம் 16—ந் தேதி அறிவிக்கப்பட்டன. அந்த விருதுப் பட்டியலில் இடம் பெற்றவர்களுக்கு விருதுகள் வழங்கும் விழா டெல்லி விஞ்ஞான பவனில் நடைபெற்றது. விருதுகளை மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை மந்திரி அஸ்வினி வைஷ்ணவ், இணை மந்திரி எல்.முருகன், துறை செயலாளர் சஞ்சய் சாஜூ ஆகியோர் முன்னிலையில் ஜனாதிபதி திரவுபதி முர்மு வழங்கினார்.

நிகழ்ச்சியில் வாழ்நாள் சாதனைக்கான தாதா சாகேப் பால்கே விருது, பிரபல இந்தி நடிகர் மிதுன் சக்ரவர்த்திக்கு வழங்கப்பட்டது.

தேசிய அளவில் சிறந்த படமாக 'ஆட்டம்' என்கிற மலையாள படத்துக்கும், ஆரோக்கியமான பொழுது போக்கை வழங்கிய படமாக 'காந்தாரா' என்கிற கன்னட படத்துக்கும் விருது வழங்கப்பட்டது.

சிறந்த நடிகருக்கான தேசிய விருதை காந்தாரா படத்தின் நாயகன் ரிஷப் ஷெட்டியும், சிறந்த நடிகைக்கான தேசிய விருதை திருச்சிற்றம்பலம் படத்துக்காக நித்யா மேனன், கட்ச் எக்ஸ்பிரஸ் படத்துக்காக மனாசி பரேக்கும் பெற்றனர்.

பொன்னியின் செல்வன்— 1 படம் தமிழில் சிறந்த படமாக தேர்வு செய்யப்பட்டு இருந்தது. இதற்கான விருதை இயக்குனர் மணிரத்னமும், தயாரிப்பாளர் சுபாஸ்கரனும் பெற்றுக் கொண்டனர். இந்த படத்தில் சிறந்த இசையமைப்புக்காக ஏ.ஆர்.ரகுமான், ஒளிப்பதிவுக்காக ரவி வர்மன், சிறந்த ஒலியமைப்புக்காக ஆனந்த் கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் தேசிய விருது பெற்றனர்.

திருச்சிற்றம்பலம் படத்தின் 'மேகம் கருக்காதா பெண்ணே பெண்ணே..' பாடலுக்காக சிறந்த நடன அமைப்புக்கு நடன இயக்குனர் சதீசுக்கு விருது வழங்கப்பட்டது. இதில் மற்றொருவரான ஜானி மாஸ்டருக்கு அறிவிக்கப்பட்ட விருது, வழக்கு காரணமாக திரும்பப் பெறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சிறந்த பின்னணி பாடகிக்கான விருதை பாம்பே ஜெயஸ்ரீ பெற்றார். சவுதி வெள்ளக்கா என்ற மலையாளப் படத்தில் சாயும் வெயில் என்கிற பாடலுக்காக அவருக்கு தேசிய விருது வழங்கப்பட்டது. சிறந்த பின்னணி பாடகருக்கான விருது, அரிஜித் சிங்குக்கு (பிரமாஸ்திரா 1)வழங்கப்பட்டது.

கே.ஜி.எப். 2 படத்தில் சிறந்த சண்டைக் காட்சி அமைப்புக்காக அன்பறிவுக்கு விருது வழங்கப்பட்டது. நடிகர் மனோஜ் பாஜ்பாயி சிறப்பு பிரிவில் விருது பெற்றார்.

விருது வழங்கும் நிகழ்ச்சியில் நடிகை குஷ்பு உள்ளிட்ட திரைப்பட தேர்வுக்குழுவினர் மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

விருதுகளில் மொழிவாரி அல்லாத சிறந்த படங்கள் மற்றும் சிறந்த இயக்குனருக்கு தங்கத் தாமரை விருதுகள் வழங்கப்பட்டன இந்த விருதுகள் ரூ.3 லட்சம் ரொக்கப்பரிசு கொண்டது ஆகும். இதைப்போல சிறந்த நடிகர் மற்றும் துணை நடிகர்கள், பின்னணி பாடகர்கள், இசை, ஒளிப்பதிவு போன்றவற்றுக்கு வெள்ளித்தாமரை விருதுகள் வழங்கப்பட்டன. இவை ரூ.2 லட்சம் ரொக்கப்பரிசு கொண்டவை ஆகும்.

சால்வை மரியாதையுடன் கூடிய தாதா சாகேப் பால்கே விருதுக்கு, ரூ.15 லட்சம் ரொக்கப் பரிசு என்பது குறிப்பிடத்தக்கது.

# நடிகர் விஜயின் த.வெ.க. மாநாட்டுக்கான மேடை அமைக்கும் பணி-உயர்மட்டக் குழு நிர்வாகிகள் ஆலோசனை!

நடிகர் விஜய் தொடங்கியுள்ள தமிழக வெற்றிக்கழக கட்சியின் முதல் அரசியல் மாநாடு வருகிற 27—ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற உள்ளது. இம்மாநாட்டுக்காக கடந்த 4—ந்தேதி பந்தல் கால் நடப்பட்டு மாநாட்டுக்கான மேடை அமைக்கும் பணி தொடங்கியது. அந்த பணி தற்போது மும்முரமாக நடந்து வருகிறது.

இம்மாநாட்டுக்காக மொத்தம் 176 ஏக்கர் பரப்பளவில் இடத்தை தேர்வு செய்துள்ளனர். இதில் 90 ஏக்கர் பரப்பளவில் மாநாட்டு திடல் அமைய உள்ளது. மீதமுள்ள இடங்கள் மாநாட்டுக்கு வருபவர்களின் வாகனங்களை நிறுத்த பார்க்கிங் வசதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

அருகில் உள்ள ரெயில்வே பாதையின் அருகே கட்சியினர் யாரும் செல்லாத வகையில் தடுப்பு வேலி அமைக்கும் பணி நடந்து வருகிறது. மேலும் மாநாட்டு திடல் பகுதியில் இருக்கும் திறந்தவெளி கிணறுகள் அருகிலும் யாரும் செல்லாத வகையில் கிணறுகளை சுற்றிலும் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன.



மாநாட்டுக்கான மேடை 60 அடி அகலம், 170 அடி நீளத்தில் அமைக்க ஏற்பாடு செய்து அதற்கான பணிகள் நடந்து வருகிறது. மாநாட்டு திடலில் 50 ஆயிரம் இருக்கைகள் போட முடிவு செய்யப்பட்டு அதற்காக அளவீடு செய்யப்படுகிறது.

அதுபோல் மேடையில் கட்சியின் தலைவர் விஜய், ஓய்வு எடுப்பதற்கு ஏற்ப தனி அறைகளும், வி.ஐ.பிக்களுக்கு என தனி அறைகளும் அமைக்கப்பட உள்ளன.

மேலும் மாநாடு நடைபெறும் இடத்தின் முகப்பை செயின்ட் ஜார்ஜ் கோட்டை (சட்டசபை) போன்ற வடிவத்தில் அமைக்க உள்ளதாகவும், குடிநீர் வசதி, கழிவறைகள் அமைக்கப்படுவதாகவும் மேடை அமைக்கும் ஒப்பந்ததாரர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், மாநாட்டிற்கு வருகிற தொண்டர்கள், நினைக்கும் சமயத்தில் உணவருந்த மாநாட்டு திடல் முழுவதும் ஆங்காங்கே ஸ்டால்கள் அமைக்கப்பட உள்ளது. குஜராத்தில் இருந்து கொடிகள், தோரணங்களும், கேரளா, டெல்லியில் இருந்து மேடை அமைக்கும் பணியாளர்களும் வருகை புரிந்து பணி மேற்கொள்ள இருக்கின்றனர். இப்பணியில் ஆயிரம் பணியாளர்களை பயன்படுத்த உள்ளோம். அவசர வழிகள், முக்கிய பிரமுகர்களுக்கு தனி வழி, பொது வழி என 10 வழிகளும், உள்ளே வரவும், வெளியே செல்லவும் 10 வழிகள் அமைக்க முடிவு செய்து பணிகளை மேற்கொண்டு வருகிறோம் என்றார்.

இந்நிலையில் கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் தலைமையில் தமிழக வெற்றிக் கழக உயர் மட்ட குழு நிர்வாகிகள் மாநாட்டு பணிகளை பார்வையிட்டு ஆலோ சனை நடத்தினர்.

# போதைப்பொருள் பரவல் குறைவாக உள்ள பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு-டிஜிபி பெருமிதம்!

பிற மாநிலங்களை ஒப்பிடுகையில், தமிழகத்தில் போதைப்பொருள் பரவல் குறைவாக உள்ள பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு என டிஜிபி விளக்கம் அளித்துள்ளார்.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக ஆளுநர் ஆர்.என்.ரவி கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி பேசுகையில், "போதைப் பொருள்களை ஒழிக்க வேண்டும் என சென்னையில் பல பெற்றோர்கள் என்னிடம் புகார் அளிக்கின்றனர். தமிழகத்தில் அதிகளவு கஞ்சா பிடிக்கப்பட்டதாக மட்டுமே தகவல்கள் உள்ளது. பிற போதைப்பொருட்கள் பிடிக்கப்படுவதாக தகவல் இல்லை என்று குற்றம் சாட்டினர். இந்நிலையில் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து டிஜிபி சங்கர் ஜிவால் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

"தமிழகத்தில் போதைப் பொருள் கடத்தல், விற்பனை, பதுக்கல் தொடர்பாக 2022—ல் 645 பேர், 2023—ல் 504 பேர், 2024 ஆகஸ்ட் வரை 533 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 2022 முதல் ஆகஸ்ட் 2024—வரை போதைப் பொருள் வழக்கில் தொடர்புடைய நபர்களின் 8,949 வங்கி கணக்குகளில் ரூ.18.03 கோடி முடக்கப்பட்டுள்ளது. மேலும், அண்டை மாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு போதைப் பொருட்கள் கடத்தப்படுவது



தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. மேலும், கல்வி நிறுவனங்களில் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போதைக்கு எதிரான குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

**10634 போதை மாத்திரைகள் பறிமுதல்**

மேலும், இந்த ஆண்டு ஆகஸ்ட்டு வரையில் 641 வழக்குகளில் 1965 கிலோ கஞ்சா, 10634 போதை மாத்திரைகள், 35,500 கிலோ மற்ற மருந்துகள், மெத்தம் பெட்டமைன், ஆம்பெடமைன், கஞ்சா சாக்லேட்டுகள் ஆகியவவை பறிமுதல் செய்யப்பட்டு தமிழகம் முழுவதும் 1148 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த ஒரு வாரத்தில் மட்டும் போதைப் பொருள் தொடர்பாக 37 வழக்குகள்




பதிவு செய்யப்பட்டு ஜார்க்கண்ட், ஆந்திரா, மேற்கு வங்கம், அருணாச்சல பிரதேசம் என 6 பிற மாநிலங்களை சேர்ந்தவர்கள் உட்பட 52 பேர் கைது செய்யப்பட்டனர். சமீப காலமாக தமிழகத்தில் போதைப் பொருள் பரவலாக இருப்பதாக சில குற்றச்சாட்டுகள் எழுந்தன. ஆனால், தரவுகளின் அடிப்படையில் ஆய்வு செய்ததில் போதைப் பொருள் பரவல் குறைவாக உள்ள பாதுகாப்பான மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. நாட்டின் பல்வேறு மாநிலங்களில் போதைப் பொருள் பயன்பாடு மற்றும் பரவல் குறித்து இந்திய அரசால் ஆய்வு நடத்தப்பட்டது.

அதன்படி, கஞ்சாவின் பயன்பாடு தமிழகத்தில் 0.1 சதவீதம் (35வது இடம்), தேசிய சராசரியான 1.2 சதவீதத்தை விட மிகக் குறைவு. அதேபோல் தமிழகத்தில் ஓபியம் வகை போதைப் பொருள் பயன்பாடு 0.26 சதவீதம் (35வது இடம்), இது தேசிய சராசரியான 2.06 சதவீதத்தை விட மிகக்குறைவு. இதேபோல், மனமயக்க மருந்துகளின் பயன்பாடு 0.3 சதவீதம் (33வது இடம்) இது தேசிய சராசரியான 1.08 சதவீதத்தை விட மிகக் குறைவு. தமிழகத்தில் போதைப் பொருட்களின் பரவல் மிகவும் குறைவாக உள்ளது என்பதை இது தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறு டிஜிபி சங்கர் ஜிவால் தெரிவித்துள்ளார்.

**மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்!**

# வளர்ந்த பாரதத்தை அடையும்வரை ஓயமாட்டேன்

## அரசின் தலைவராக 23 ஆண்டுகளை நிறைவு செய்ததையொட்டி பிரதமர் மோடி உறுதி!

வளர்ந்த பாரதம் எனும் கூட்டு இலக்கு எட்டப்படும் வரை ஓயமாட்டேன் என பிரதமர் மோடி உறுதிபட தெரிவித்து உள்ளார்.

பிரதமர் மோடி கடந்த 2001—ம் ஆண்டு அக்டோபர் 7—ந் தேதி முதன் முதலாக குஜராத் முதலமைச்சராக பதவியேற்றார். 2014—ம் ஆண்டு வரை அந்த பதவியில் இருந்த அவர், பின்னர் நாட்டின் பிரதமரானார். அந்த பதவியிலும் 10 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகிறார்.

இதன் மூலம் குஜராத் முதலமைச்சர் மற்றும் நாட்டின் பிரதமர் என அரசின் தலைவராக 23 ஆண்டுகளை அவர் நிறைவு செய்து உள்ளார். இதையொட்டி அவர் தனது எக்ஸ் தளத்தில் கூறியிருப்பதாவது:—



ஒரு அரசின் தலைவராக 23 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதை யொட்டி எனக்கு வாழ்த்தும், ஆசியும் வழங்கிய அனைவருக்கும் இதயப்பூர்வ நன்றிகள். குஜராத் முதலமைச்சராக பணியாற்றும் பொறுப்பை 2001—ம் ஆண்டு அக்டோபர் 7—ந் தேதி ஏற்றுக்கொண்டேன்.

என்னைப் போன்ற ஒரு பணிவான தொண்டனை மாநில நிர்வாகத்துக்கு தலைமை தாங்கும் பொறுப்பை வழங்கியது எனது கட்சியான பாரதீய ஜனதாவின் மகத்துவம் ஆகும்.

நான் முதலமைச்சராக பொறுப்பேற்ற போது குஜராத் ஏராளமான சவால்களை எதிர்கொண்டிருந்தது. கட்ச் பூகம்பம், அதற்கு முன்பு ஒரு மிகப் பெரிய புயல், மாபெ ரும் வறட்சி, பல்லாண்டுகளாக காங்கிரசின் கொள்ளை, வகுப்புவாதம் மற்றும் சாதிவெறி போன்ற தவறான நிர்வாகத்தின் மரபுகள் என எண்ணற்ற சவால்கள் இருந்தன.

மக்கள் சக்தியின் உதவியால் நாங்கள் குஜராத்தை மீண்டும் கட்டியெழுப்பினோம். குஜராத் முதலமைச்சராக 13 ஆண்டுகால எனது ஆட்சியில் குஜராத் ஒரு ஒளிரும் எடுத்துக்காட்டாக உருவெடுத்தது. சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் வளத்தை உறுதி செய்தது. 2014—ம் ஆண்டில் இந்திய மக்கள் பா.ஜ.க.வுக்கு ஒரு வரலாற்று சிறப்பு மிக்க வெற்றியை கொடுத்தனர். அதன் மூலம் பிரதமராகும் வாய்ப்பும் எனக்கு கிடைத்தது. கடந்த 10 ஆண்டுகளில் எங்களால் ஏராள மான சவால்களுக்கு தீர்வு காண முடிந்தது. 25 கோடிக்கு அதிகமான மக்களை வறுமையில் இருந்து மீட்டு இருக்கிறோம். உலகின் 5—வது பெரிய பொருளாதாரமாக மாறியிருக்கிறது. இது நமது சிறு, குறு, நடுத்தர தொழில் துறைகள் மற்றும் ஸ்டார்ட் அப் துறைகளுக்கு உதவியிருக் கிறது. விவசாயிகள், பெண்கள், இளைஞர்கள், ஏழைகள் மற்றும் சமூகத்தின் விளிம்புநிலை மக்களுக்கு மேம்பாட்டுக்கான புதிய வழிகள் திறக்கப்பட்டுள்ளன.

இந்த 23 வருட கற்றல் மூலம் தேசிய அளவிலும், உலக அளவிலும் தாக்கத்தை ஏற்படுத்திய பல்வேறு முன்னோடி திட்டங்களைக் கொண்டு வர எனக்கு உதவியது. நான் தொடர்ந்து அயராது உழைப்பேன் என்று எனது சக குடிமக்களுக்கு உறுதியளிக்கிறேன். வளர்ந்த பாரதம் என்ற நமது கூட்டு இலக்கு நிறைவேறும் வரை நான் ஓயமாட்டேன். இவ்வாறு பிரதமர் மோடி கூறியுள்ளார்.

# ஷிவ் நாடார் ஸ்கூல் ஆப் லா

## சுப்ரீம் கோர்ட் நீதிபதி சுந்தரேஷ் துவக்கி வைத்தர்!



ஷிவ் நாடார் பல்கலைக்கழகத்தின் ஒரு அங்கமான லா ஸ்கூல் (சட்டப்பள்ளி) ஐந்து ஆண்டுகள் காலஅளவைக் கொண்ட பி.ஏ.எல்.எல்.பி கல்வித் திட்டத்தை வழங்குகிறது.

ஷிவ் நாடார் ஃபவுண்டேஷனின் புதிய முன்னெடுப்பு நடவடிக்கையான ஷிவ் நாடார் ஸ்கூல் ஆஃப் லா, சென்னையில் அமைந்துள்ள ஷிவ் நாடார் பல்கலைக்கழக வளாகத்தில் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. இதற்கான மாபெரும் தொடக்கவிழா நிகழ்வில் சுப்ரீம் கோர்ட் நீதிபதி எம்.எம். சுந்தரேஷ் தலைமை விருந்தினராக பங்கேற்றார். சென்னை ஷிவ் நாடார் பல்லைக்கழகத்தின் துணை வேந்தர் எஸ்.கே. பட்டாச்சார்யா, ஷிவ் நாடார் பவுண்டேஷன் அறங்காவலர் ஷிகர் மல்ஹோத்ரா, ஷிவ் நாடார் ஸ்கூல் ஆஃப் லா டீன் ஷிவ் சுவாமிநாதன் மற்றும் இதன் இணை டீன் பேராசிரியர் டாக்டர். வினய் சீத்தாபதி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்திய பார் கவுன்சில் ன் அங்கீகாரம் பெற்ற ஷிவ் நாடார் ஸ்கூல் ஆஃப் லா, 5 ஆண்டுகள் காலஅளவு கொண்ட பி.ஏ.பி.எல்., கல்வித்திட்டத்தை வழங்குகிறது. இக்கல்வித்திட்டத்திற்கான தொடக்க பேட்சில் 45 மாணவர்கள் இணைந்திருக்கின்றனர். அடுத்த ஆண்டிற்கு 120 மாணவர்கள் இடம் பெற வாய்ப்புள்ளது. பல மாணவர்களுக்கு, முழுமையான கல்விக்கட்டண தள்ளுபடி உட்பட, தாராளமான ஸ்காலர்ஷிப் திட்டம் வழங்கப்பட்டிருக்கிறது.

சென்னை ஷிவ் நாடார் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் ஸ்ரீமன் குமார் பட்டாச்சார்யா கூறியதாவது:

பேரார்வம் கொண்ட சட்டத்துறை மாணவர்களை உலகத் தரத்திலான வழக்குரைஞர்களாக மாற்றுவதற்கு சென்னையில் ஷிவ் நாடார் ஸ்சூல் ஆஃப் லா ஐ தொடங்குவதில் நாங்கள் பெருமகிழ்ச்சியடைகிறோம். சட்டப்படிப்புகளோடு லிபரல் ஆர்ட்ஸ் கல்வித் திட்டத்தையும் இது ஒருங்கிணைத்திருக்கிறது மற்றும் இதன் பாடத்திட்டம் உலகளாவிய சிறந்த நடைமுறைகளைச் சார்ந்ததாக உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆக்ஸ் போர்டு, ஹார்வர்டு, யேல் மற்றும் பிரின்ஸ்டன் போன்ற மிகச்சிறந்த மேற்கத்திய பல்கலைக்கழகங்களில் படித்த பேராசிரியர்களும், ஆசிரியர் குழு உறுப்பினர்களும் இங்கு ஆசிரியர்களாக பணிபுரிய தேர்வு செய்யப் பட்டிருக்கின்றனர்.

இதற்கும் மேலாக, எமது ஆசிரியர் குழுவில் 5—ல் ஒரு பங்கு நபர்கள் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் வழக்கறிஞர்களாகவும் திறம்பட பணியாற்றுபவர்களாக இருப்பார்கள். வெற்றிகரமான கரியருக்கு இங்கு கல்வி பயிலும் ஒவ்வொரு மாணவரும் அடிப்படையான மற்றும் விரிவான நடைமுறை சார்ந்த சட்டத்தில் சிறப்பான அறிவையும், திறனையும் பெற்றிருப்பதை உறுதி செய்வதில் எங்களை நாங்கள் முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம்.

ஷிவ் நாடார் பள்ளியின் தலைவரும், ஷிவ் நாடார் பவுண்டேஷனின் அறங்காவலருமான ஷிகர் மல்ஹோத்ரா கூறியதாவது:

கல்வியில் 30 ஆண்டுகள் என்ற சிறப்பான பாரம்பரியத்தைக் கொண்டிருக்கும் ஷிவ் நாடார் ஃபவுண்டேஷன் இந்தியாவில் கல்விக்காக ரூ.7600 கோடிக்கும் அதிகமாகமுதலீடுசெய்திருக்கிறது. வலுவான திறன்களை கொண்டு நிலையான மாற்றத்தை இச்சமுதாயத்தில் உருவாக்கும் புத்தாக்குனர்களாக எமது மாணவர்களை உருவாக்குகின்ற கல்வி நிறுவனங்களை நிறுவுவது இதன் நோக்கமாகும். அறிவு சார்ந்த ஆய்விற்கும், புத்தாக்கத்திற்குமான மையமாக சென்னையிலுள்ள ஷிவ் நாடார் பல்கலைக்கழகம் இயங்கி வருகிறது. லா ஸ்கூல் இப்போது தொடங்கப்பட்டிருப்பதால், இந்தியாவின் மிகச்சிறந்த சட்ட தொழில்முறை வல்லுநர்களையும், நிபுணர்களையும் வளர்த்து உருவாக்க நாங்கள் இப்போது தயாராக இருக்கிறோம்.

ஷிவ் நாடார் ஸ்கூல் ஆஃப் லா டீன் ஷிவ் பிரசாத் சுவாமிநாதன் பேசுகையில்,

ஷிவ் நாடார் ஃபவுண்டேஷனின் சிறப்பான பயணத்தில் ஒரு மைல்கல் நிகழ்வாக இன்று நடைபெறும் ஷிவ் நாடார் ஸ்கூல் ஆஃப் லா தொடக்க விழாவில் பங்கேற்பதை நான் பெரும் கௌரவமாக கருதுகிறேன். உறுதியான நன்னெறிகளை கொண்டிருக்கின்ற திறமையான சட்ட நிபுணர்கள் இந்தியாவிற்கு அதிக எண்ணிக்கையில் தேவைப்படுகின்ற இக்காலகட்டத்தில், கல்வியின் வழியாக சமுதாயங்கள் திறனதிகாரம் பெறச் செய்வதில் 30 ஆண்டுகால வளமான பாரம்பரியத்தைக் கொண்டிருக்கும் இந்த ஃபவுண்டேஷனின் ஆதரவு பெற்ற இப்பள்ளி தனித்தன்மையோடு செயல்படும். மிக நவீன ஆராய்ச்சியானது, வகுப்பறைக்குள் கால் எடுத்து வைக்கவிருப்பதால், மாணவர்களுக்கு கற்பிக்கப்படுபவை மீதும் இது நேரடி தாக்கத்தைக் கொண்டிருக்கும் என்றார்.

# காடும் காலநிலை மாற்றமும்

# சென்னையில் சூழலியல் கருத்தரங்கு

## புவியைப் பாதுகாக்க சூழலியல் ஆய்வாளர்கள் வேண்டுகோள்!




பூமியில் ஏற்படும் அதிதீவிர கன மழை வெள்ளம், வெப்பத்திற்கு காரணமான, புவி வெப்பமயமாவதை தடுக்க, மேற்குத் தொடர்ச்சி மலை, கோயில் காடுகளை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை சூழலியல் ஆய்வாளர்கள் வலியுறுத்தினர்.

"காடும் காலநிலை மாற்றமும் " என்ற தலைப்பிலான கருத்தரங்கு கோட்டூர்புரம் தமிழ் இணைய வழி கல்வி அரங்கில் நடைபெற்றது.

"மேற்கு தொடர்ச்சி மலை காலநிலை மாற்றம்" குறித்து ஆதி வள்ளியப்பன், "இந்திய காடும் காலநிலை மாற்றமும் ஓர் இந்திய புரிதல்" குறித்து காட்டுயிர் ஆய்வாளர் ஜெகநாதன், "தாவரமும் காலநிலை மாற்றமும்" குறித்து பேராசிரியர் நரசிம்மன், "கோவில் காடுகள்" குறித்து எழுத்தாளர் நக்கீரன் உரையாற்றினார்கள்.

சூழலியல் நூல் அறிமுகம் அமர்வில் செழியன்.ஜா, அருண் பிரசாத், தீபக் உரையாற்றினார்கள்.

ஆய்வாளர்கள் தங்கள் உரையில், காலநிலை மாற்றம்—புவியில் வெப்பம் அதிகமாவது இரண்டு சொல்லாடலும் ஒன்றா என்றால் வேறுபாடு உண்டு என்று சொல்ல வேண்டும். கடல் மட்டம் உயர்வு, பருவ மழை மாறுபாடு, பூ வி வெப்பம் அதிகரிப்பு. பனிப் பாறைகள் உருகுவது போன்ற பல காரணிகளை உள்ளடக்கியது தான் காலநிலை மாற்றம்.

கடந்த 100 ஆண்டுகளில் பூமியின் வெப்பநிலை 1 டிகிரி உயர்ந்து உள்ளது. இதற்கு முக்கிய காரணமாக குறிப்பிட வேண்டுமென்றால் கார்பன் டை ஆக்சைட் காற்றில் அதிகமாகி வருவதை சொல்லலாம். இவற்றின் தாக்கம் அதிகமாகி கொண்டே வருவதன் அறிகுறிதான் பூமியில் ஏற்படும் அனைத்து மாற்றங்களுக்கும் காரணம் என்று கூறினர்.

நிறைவாக பேசிய எழுத்தாளர் நக்கீரன், கோவில் காடுகள் இன்று மிக அதிகமான கார்பனை தேக்கி வைக்கும் இடமாக உள்ளது. ஆனால் அதை பாதுகாப்பது குறித்து சிறு முன்னெடுப்பும் இதுவரை இல்லை. ஆனால் அதற்கு சட்டம் உண்டு. மக்கள் தங்கள் முயற்சியால் இத்தகைய காடுகளை பாதுகாக்க வேண்டும். சூழலியல் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட அந்த காடுகளில், பின்னர் தான் கோயில்கள் உருவாகி இருக்க வேண்டும் என்ற கருத்தும் இருக்கிறது. எனவே கோயில் காடுகளை பாதுகாக்க வேண்டியது மிக மிக அவசியமானது என்று நக்கீரன் வலியுறுத்தினார்.

காலநிலை மாற்றம் மனிதன் மட்டும் பாதிப்பு அடைய போவதில்லை. அனைத்து உயிரினங்களும் சேர்ந்தே பாதிப்படையும். இன்றும் பசுபிக் பெருங்கடலில் உள்ள தீவுகளில் கடல் மட்டம் உயர்வால் மூழ்கி அங்கு உள்ள மக்கள் தீவின் நடுப்பகுதிக்கு நகர்ந்து செல்ல தொடங்கி உள்ளனர்.

இன்னும் சில தீவுகள், அருகில் உள்ள நாடுகளில் இடங்களை வாங்கி, தீவு மூழ்கி விட்டால் இடம்பெயரும் முடிவு செய்தும் உள்ளனர்.

இதற்கு அனைத்தும் காரணம் காலநிலை மாற்றம் மட்டுமே என்று நினைவில் கொள்ள வேண்டும். அதற்கு அரசு மட்டுமல்லாமல் பொது மக்களும் தங்களுடைய பங்களிப்பை நல்க வேண்டும் என்று அனைத்து சூழலியல் ஆய்வாளர்களும் தங்கள் கருத்துக்களை முன் வைத்தனர்.

கருத்தரங்கில் சூழலியல் குறித்த நூல்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டு இருந்தது. இந்த நிகழ்ச்சியில் ஏராளமான சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்**
**மழை பெறுவோம்!**

**தற்போது தமிழ் சொல் மாத இதழை ஆன்லைனில் படிக்க...**

Scan and Read

**www.tamilsoul.com**

Published and Printed by Karthikeyan P and Printed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabathkhan Bhadur Street, Ellies Road, Chennai-600 002 and Published at 13/25, 2nd Street, Sundharapuram, Puliyanthope, Chennai-600 012. Cell : 94444 01485 Editor: SRIDHAR